



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIRUSIYA

# தீப்பிடித்த பூக்கள்

ரா.ப.அரூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THEEPPIDITHTHA POOKKAL

*Collection of Essays*

| | |
|---|---|
| **Author** | **: R.F.Arooz** |
| **Copy Right** | **: Author** |
| **No.of Pages** | **: 102+VI** |
| **No.of Copies** | **: 1000** |
| **ISBN** | **: 978-955-52299-0-6** |
| **Type setting & Layout** | **: R.F.Arooz** |
| **Graphic Designer** | **: R.F.Munees** |
| **Edition** | **: First (December 2009)** |
| **Publishers** | **: KE Media Group** |
| **Printed at** | **: A.J Prints (Pvt) Ltd.** |
| **Price** | **: Rs.250 / US $ 2.2** |



**R.F.Arooz, Maharoof Nagar, Kinniya- 03, Sri Lanka.**
**Tel: +94 77 2305760 E-mail: raapa.arooz@gmail.com**
**+94 77 4328525 Web: www.achiever21in21.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மு.மேத்தாவின் வாழ்த்துரை

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில்-

கிண்ணியா மண்ணிலிருந்து கூவுகிறது இக்குயில்.
இந்த இருபத்தொரு வயதுக் குயிலின் பெயர் - ரா.ப.அரூஸ்.

பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படிக்கும்போதே தன் கவிதை நூலினை வெளியிட்டவர்.

ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்போதே பல்சுவை மாத இதழொன்றின் ஆசிரியராயிருந்து தன் ஆற்றலை நிரூபித்தவர்.

அரசு நடத்திய அகில இலங்கைக் கவிதை, சிறுகதைப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தையும் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றவர்.
தமிழ் நெஞ்சங்களில் நின்றவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தொரு வயது இளைஞர் அரூஸ்-
தனது இருபத்தொராவது வயதில் எழுதிய இருபத்தொரு நூல்களையும் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

உலக சாதனை இது!
ஒப்பற்ற இவரின் ஆர்வத்தையும் ஆற்றலையும் போற்றுவோம்!

*வாழ்த்துக்களுடன்,*

**மு.மேத்தா.**

**சென்னை -90**
**18.04.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவிலாசம் பதித்த கருத்துக்கள்

**கலாநிதி கல்லாறு சதீஷ்**

கனவு காணாத மனிதர்கள் யாருமில்லை. ஆனால் அக்கனவுகளைக் கையிலேந்தத்தான் எல்லோராலும் முடிவதில்லை.

திறமை, முயற்சி இரண்டிலுமே முயற்சிதான் வெற்றியின் முக்கிய அடையாளம்.
முயற்சிதான் கனவுகளைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறது.

எடிசனின் முயற்சி இருளைப் போக்கியது.
ரஷ்ய முயற்சி விண்வெளி கண்டது.
அமெரிக்க முயற்சி நிலாவில் தடம் பதித்தது.
சேர்னின் (CERN) முயற்சி இணையம் செய்தது.
அரூஸின் முயற்சி 21இல் 21 நூலைப் பிரசவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னயிது?

இருபத்தியொரு வயதில் இருபத்தியொரு நூலா?
ஆச்சரியக்குறி மூக்கின் மேல் விழுந்தது!

அப்படி என்னதான் எழுதியிருப்பார்?

இது, வெறும் வயதுக்கான நூல்களின் எண்ணிக்கையா?
கேள்விகள் மூளையில் உறைத்தது.

இதுபற்றி மேலும் யோசிக்க நேரமின்றி, வேலைகளில் பறக்கும் நேரங்களில் அரூஸ் மீண்டும் மீண்டும் எனது மனக்கதவுகளைத் தட்டுகிறார்.

அரூஸின் தட்டல்களே அவர் எத்தனை முயற்சியாளர் என்பதனைப் பட்டியலிடுகின்றது.

ஒளி வேகத்திலோடும் வாழ்க்கைச் சக்கரத்தில் தீப்பிடித்த பூக்கள் என்னும் படைப்பு, எனது படிப்பாகிறது.

ஆச்சரிய மின்னல்கள் என்னை ஆரவாரத்தோடு கரம்பிடிக்கின்றன. அரூஸ் தெரிவு செய்த ஒவ்வொரு தலைப்புகளிலும் அல்லது ஒவ்வொரு விடயங்களிலும் ஞானவிலாசம் பதித்த கருத்துக்களை இறக்கிப் பதித்திருக்கிறார். பதித்த கருத்துக்களை தேன் தமிழ் கொண்டு, தமிழின் பேரரசுகள் போல் படைத்து நிற்கிறார்.

இனி அவரின் படைப்பிலிருந்து சில துளிகளைப் படிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மண்டலம் - “மற்றவர்களற்ற நான் மண்டலத்தில் இந்த நான் என்ன செய்யவியலும் என்பதனை ஒரு கணமும் எம்மவர்கள் சிந்திப்பதே கிடையாது” என்று எழுதுகிறார்.

இதுதான் வாழ்வின் அடிப்படையின் எதிர்மறை.
உறவுகளால்த்தான் உலகமே வளர்ச்சியடைகிறது.
நல்ல நட்புகளால்தான் வாழ்க்கை வளம் பெறுகிறது.

வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கையை எடுத்துப்பார்த்தால் திறமை, முயற்சி, இவையோடு நட்பு எனும் பெரும் வட்டமும், நல்ல உறவின் சுற்றமும் கைகோர்த்து நிற்கும்.

“நான் - அழித்து
நாம் - செய்வோம்” என்பதனை அரூஸ், “நான் மண்டலத்தில்” மிக அழகாகப் பதிவு செய்து “தீப்பிடித்த பூக்கள்” எனும் அவரின் படைப்பைத் தொடக்கி வைத்துள்ளார்.

சட்டம் - “சட்டத்திலுள்ள ஓட்டைகளினுள் சிறையிலுள்ள நிரபராதிகளின் முகங்கள் தெரிகின்றன” என்று எழுதுகிறார்.

ஆம், சிறைக் கூண்டுகளுக்குள்ளே பூத்தும், காய்த்தும், கனிந்தும்... நிரபராதிகள். கைதிகளாய், அவர்கள் முகங்களில் மனிதம் கேள்விக்குறியாய் மட்டுமே என்பதனை அரூஸ் சட்டத்தின் ஓட்டைகளினால் காண்கிறார்.

அரூஸ், தனது எழுத்துப்பணியினைத் தற்போதுதான் தொடங்கியவர் போலன்றும், இப்போதுதான் இருபத்தியொன்றைத் தொட்டவர் போலன்றும்... ஆழ்ந்த, தேர்ந்த புலமையினால் நிரப்பியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீப்பிடித்த பூக்கள்" - சிறந்த வாசிப்பனுபவத்தினை மட்டுமன்றி வாழ்க்கையின் நெறியினையும் கற்றுத்தருகிறது.

இந்நூலின் பல தலைப்புகளிலும் சமூக, அரசியல் பின்புலங்களைக் கூறி சிறந்த எதிர்காலத்திற்கு வித்திடுகிறார்.

இறுதியாக, "கூட்டமாய்க் கூத்தடித்தல்" என்று வள்ளுவரின் துணையோடு கூடா நட்பைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

அரூஸின் நூல்களை வாங்கிப்படியுங்கள்.
இந்தச் சாதனைமிகு இளைஞனின் கரங்களை வலுப்படுத்துங்கள்.

எதிர்கால எம் தேசத்திற்கு மிகச் சிறந்த படைப்பாளி, சிந்தனைவாதி. சாதனையாளன், ஏன் தலைவன் தோற்றம் பெற்றுள்ளதனை இந்த நூல் அழகாகக் கட்டியம் கட்டுகிறது.

ரா.ப.அரூஸ், உங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.
உங்களின் படைப்புகள் உலகமெலாம் பரவி மெய் ஒளி பாய்ச்சட்டும்!

*என்றும் கனிந்த அன்புடன்.*
**கலாநிதி கல்லாறு சதீஷ்.**

**சுவிட்சர்லாந்து.**
**07.06.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் காப்போம்!

**ரா.ப.அரூஸ்**

தீப்பிடித்த பூக்கள்!

இவை எனது கண்ணீரில் மலர்ந்த பூக்கள்.
அத்தனை பூவிலும் ரத்தம்.
ஏனெனில் எனது கண்களிலிருந்து வருபவை ரத்தக் கண்ணீர்!

மானுடத்தின் கவலைகளைக் கட்டுரைகளாக்கியிருக்கிறேன்.
யாவரும் பார்த்து அழுவதற்காக அல்ல;
இனியாவது நன்னெறியில் ஒழுகுவதற்காக!

மானுட மாண்புகளை முகங்குப்புற வீழ்த்தும் சமுதாயம் எனது பேனா சிந்திய கண்ணீரில் அமிழ்ந்து காணாமல் போகட்டும்.

அநீதிகள் அத்தனையினையும் குழி தோண்டிப் புதைப்போம்!
யாவரும் சேர்ந்து புதுச் சமுதாயம் விதைப்போம்!!

*அறைகூவலுடன்...*

**ரா.ப.அரூஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்...

01/13 "நான்" மண்டலம்
02/18 சட்டம்
03/22 பொய்ப்பாகுபாடு
04/27 தீப்பிடித்த பூக்கள்
05/32 தாய் சொல் தட்டு!
06/37 "வாழ்க்கைப் பிச்சை போடுங்க..."
07/42 புது ரத்தம் பாய்ச்சுவோம்!
08/48 முகமூடிகள்!
09/53 "பெரிய மனுசர்கள்?"
10/57 நீரும் நெருப்பும்
11/63 காலம் உயிரானது
12/69 பணங்கொடுத்து உயிர் விற்றல்
13/76 வரம்பு தாண்டும் நரம்பில்லாத் துண்டம்
14/80 புன்னகைப் பூக்கள்
15/89 உன்னை உயர்த்திக்காட்டு!
16/95 "கூட்டமாய்க் கூத்தடித்தல்"

***பின்னிணைப்பு***
"21 in 21" பற்றிய கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான்" மண்டலம்

நாம் வாழும் பூமி மானிட உறவுகளின் சிதைவுகளை எண்ணி ஓலமிடுகிறது.

சண்டையும் சச்சரவும், சதி செய்யும் திட்டமும் என்றவாறு எம்மவர்களின் மத்தியிலே பிரச்சினைகள் அடுக்கப்பட்ட வண்ணமேயிருக்கின்றன.

மானிட இனத்தின் பிறப்பு, சமுதாய அமைப்பு இங்கே அர்த்தமற்றுக் கிடக்கிறது.

"மனிதன் ஒரு சமூகப்பிராணி" என்ற வாக்கு உணர்வற்ற உச்சரிப்பாய் பரீட்சை விடைத்தாளில் மாத்திரமே பதிக்கப்படுகிறது. விடையெழுதும் அத்தனை பேரும் இதனை உள்ளத்தில் பதித்தாலே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் சமூகத்தில் சண்டை இராது, உளச்சகதி இராது. பொய் இராது, உட் பூசல் இராது.

ஆனால், இங்கோ அத்தனையும் அடாவடியாய் நிரம்பி வழிகிறது. பெற்றோர் - பிள்ளைகள் தொடங்கி அரசு - அமைச்சர் வரையிலான அத்தனை உறவுகளிளும் உன்னதம் உயிர்ப்பின்றிக் கிடக்கிறது.

குழந்தை என்ற நாமமின்றேல் பெற்றோர் எனும் அந்தஸ்த்து தோன்றியிருக்காது.

மனைவி என்றொன்று இல்லையென்றால் கணவன் எனும் பதம் தேவைப்பட்டிருக்காது.

சீடர்கள் இன்றிய குரு சிறப்புக்கள் குன்றியவராவார்.

பொது மக்கள் இல்லையென்றால் இங்கே அதிகாரிகள் அவசியமற்றவர்கள்.

குடிமக்கள் இல்லையென்றால் அரசு எனும் பதம் அர்த்தமிழந்து போயிருக்கும்.

இவ்வாறாக வட்டப்பாதையில் வடிவமைக்கப் பட்டிருக்கும் எம் உறவுகள் தவறாகத் தரிப்பதனாலும், அத்து மீறிப்பயணிப்பதாலும் நம் சமுதாயத்தில் ஆங்காங்கே ஓராயிரம் விபத்துக்கள்.

மகனுக்கு விட்டுக்கொடுக்க தந்தைக்கு மனமில்லை; பக்கத்து வீட்டுக்காரன் காதைப் பொத்துகிறான்!

பள்ளியில் கற்பிக்க ஆசானுக்கு நேரமில்லை; மாணவனின் நேரம் களவாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருட்டுக்கு எந்த நீதிமன்றத்தில் தண்டனை வாங்கிக் கொடுப்பது?

நோயாளியைக் கவனிக்க மருத்துவனுக்கு மனமில்லை; சொந்த டிஸ்பென்ஸரிகளில் வெற்றி வாரம்!

மக்களின் குறை தீர்ப்பதில் அதிகாரிக்கு அக்கறையில்லை; மிஞ்சுவது கண்ணீர் மட்டுமே!

இவ்வாறாக நீதியிங்கே தீயிலிடப்படுகையில் தன்னுள்ளே அதிர்ந்து ஓலமிடுவதைத் தவிர எம் பூமாதேவியால் யாது செய்ய முடியும்??

வேறொன்றுமில்லை; சுனாமியை ஞாபகமூட்டுகிறேன்!

"நான்... நான்..., எனக்கு..., எனக்கு மட்டுமே..." எனும் கோசமே எப்போதும் அனைவரின் உள்ளத்திலும் ஊன்றி ஒலிக்கிறது.

இதன் பிரதிபலிப்பே எமது சமுதாயத்தில் அரங்கேறும் தட்டிப்பறிப்புக்கள், காட்டிக் கொடுப்புக்கள், வெறும் கண்துடைப்புக்கள் என்பனவெல்லாம்...

மற்றவர்களற்ற மண்டலத்தில் இந்த "நான்" என்ன செய்யவியலும் என்பதனை ஒரு கணமும் எம்மவர்கள் சிந்திப்பதே கிடையாது.

ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு ஒன்றாக வாழ்வதிலேயே மனித வாழ்வு முழு அர்த்தம் பெறுகிறது.

எம்மவன் சிரிக்கும் போது அவனுடன் சேர்ந்து நாம் எவ்வாறு சிரிக்கிறோமோ அதுபோலவே எம்மவன் அழும் போதும் அவனுடன் சேர்ந்து அழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அந்தச் சிரிப்பும் அழுக்கையும் முழுமையடைகிறது.

நாம் எமக்குள்ளேயே பூரணத்தை வைத்துக் கொண்டு அதனை அனுபவிக்கத் தவறிக்கொண்டிருக்கின்றோம்.

குறுகிய லாபங்களுக்காக குருட்டுத்தனமாய்க் குதிரையோடிக் கொண்டிருக்கும் நாம், எதையுமே விசாலமாகச் சிந்திக்கத் தவறிவிடுகிறோம்.

அடம்பன் கொடிப் பழமொழியை எழுதிக் கொடுக்கும் நாமே "நான், நான்..." என்றும் அலைகின்றோம்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற ஆன்றோர் வாக்கு வெறுமனே வாக்காக மட்டுமே கிடக்கிறதே தவிர இன்னும் வாழ்க்கையாக்கப் படவில்லை.

இந்நிலை உருவாகும் போதே எமக்கென்றொரு சரித்திரம், எமக்கென்றொரு தனித்துவம், எமக்கென்றொரு சிம்மாசனம், எமக்கென்றொரு சாம்ராஜ்யம் என்பவற்றைக் கனவு காண முடியும்.

ஆனால் எமது சமுதாயத்தினுள்ளேயே நாம் காட்டும் "நான்" தன்மை இருக்கும் வரை அல்லல் இருந்தே தீரும்.

ஒரு போதும் வரலாற்றுப் பதிவுப் போட்டியில் எம்மால் இறுதிச் சுற்று வரை முன்னேற முடியாது.

ஏன், காலிறுதியில் கூட காலடி வைப்பது கடினம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம்

சட்டத்திலுள்ள

ஓட்டைகளினுள்
சிறையிலுள்ள
நிரபராதிகளின்
முகங்கள் தெரிகின்றன!

ஆம்,
சட்டத்தில் ஓராயிரம் ஓட்டைகள். இந்த ஓட்டைகளின் பிரசவிப்பில்-
ஓராயிரம் தாய்மார்களின் கண்ணீர்
ஓராயிரம் மனைவியரின் கண்ணீர்
ஓராயிரம் பிள்ளைகளின் கண்ணீர்
ஓராயிரம் சகோதரங்களின் கண்ணீர்

இவ்வாறாக ஒரு கண்ணீர் சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்கிய பெருமை சட்டத்திற்குண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே இலக்கியங்கள் பிழைக்கின்றன-
"ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்??? "

வாழ்க்கை வரம்புகளை அத்துமீறும் ஆத்மாக்களுக்காக சட்டம் உருவாக்கிய சிறைக்கூடத்தில் -
வாழ்க்கையை நுகரத்துடிக்கும் எத்தனையோ உள்ளங்கள்!

உள்ளிருக்க வேண்டியவர்கள் வெளியிலிருக்கிறார்கள்;
நிழலிலிருக்க வேண்டியவர்கள் வெயிலிலிருக்கிறார்கள்!
இது உலகில் மானிடன் உருவாக்கிய சட்டத்தின் ஒழுங்கு.

பணத்தினால் சாவி செய்யத்தெரிந்தவனுக்கு சட்டம் ஒருதடையல்ல.
பணமே இல்லாதவனுக்கு சட்டமே தடையாகிறது.
சட்டத்தினால் நன்மையடைபவர்கள் ஆயிரக்கணக்கானோர்.
அந்த ஆயிரக்கணக்கானோரினால் தீமையடைபவர்கள் பல்லாயிரக் -கணக்கானோர்.

உள்ளதை உள்ளபடிச் சொல்லச்சொல்லும் சட்டத்திற்கு
உள்ளத்தைப் பார்க்கத் தெரியாது.

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்" எனும்
பொதுமறையின் முன் மானிடன் உருவாக்கிய சட்டம் கூனிக்குறுகி நிற்கிறது.
நீ இல்லாததைக் கூடச் சொல்லு ; அது நல்லதாய் யாருக்குமினியதாய் இருக்க வேண்டும்!
யாரைக் குற்றம் சொல்ல -
சட்டத்தையா? வள்ளுவனையா??

சட்டம் யாருக்கு உருவாக்கப்பட்டது?
மனித மனத்திற்கா? அல்லது மனித சடத்திற்கா??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடத்தின் சட்டமாவது இவ்வுலகில் சரியாயிருக்கிறதா?
சட்டத்தின் இருப்பிடத்தின் மூலையிலுள்ள சாராய போத்தல்கள்
சட்டத்தைப் பார்த்துச் சிரிக்கின்றன.

காட்டில் களவெடுப்பவனைக் காணத்துடிக்கும் சட்டம்
வீட்டிலிருந்தவாறே "பிளேக் மனி" சேகரிப்பவனைக் கணக்கிலும்
எடுப்பதில்லை.

ஏழு நாட்களாகத் தொடர்ந்து காட்டிலே சிரமப்பட்டு விறகு சேகரிக்கிறான்
ஒருவன்.

எட்டாவது நாள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுகிறான்.
அவனது வியர்வை?
அவனது உழைப்பு?
அவனது முயற்சி?
அவனது குடும்பம்?

பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் படி பொதிகள் வருகிறது.
அத்தனையும் அதிகாரியின் வீட்டிலே தஞ்சமடைகின்றன.

மேலே ஆஜர்படுத்திய சட்டம்
கீழே ஆஜராகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொய்ப்பாகுபாடு

இலங்கை!

மூவின மக்கள் ஒன்றாய் வாழும் நாடென்று சொல்லித்தான் அரசியல்வாதிகள் அரசியல் செய்கிறார்கள்.
மீடியாக் காரர்கள் மீடியா நடத்துகிறார்கள்.

யார் அந்த மூவின மக்கள் என்றால்
அனைவரும் சொல்கிறார்கள்;
சிங்களவர்
தமிழர்
முஸ்லிம்கள்.

இதென்னவோ எனக்கென்றால், ஐந்து ஆடும் மூன்று மாடும் பத்து ஆடு என்பதான பொய்க்கணக்காகவே தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மொழியைப் பேசியதால் சிங்களவர்களானார்கள்.
தமிழ் மொழியைப் பேசியதால் தமிழர்களானார்கள்.
முஸ்லிம்கள்?!

அவர்களின் வகைப்படுத்தல் பொய்யாகிறதே...

அப்படியானால் எதை அடியாகக் கொண்டு இந்த வகைப்படுத்தல் அரங்கேறியது?
இனத்தினையா?
மதத்தினையா?

இனத்தினைக் கொண்டானால்-
இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே மனிதர்களில் இரண்டே இனம்தான்.
ஒன்று ஆண்.
மற்றையது பெண்.

மதத்தினைக் கொண்டானால்-
பௌத்தர்கள்
இந்துக்கள்
இஸ்லாமியர்கள்
கிறிஸ்தவர்கள்
என்று நான்காகும்.

இவ் எந்த யாப்புக்களிலும் "சிங்கள- தமிழ்- முஸ்லிம்" என வகுக்கப் படவில்லையே.
இங்குள்ளவர்களிடம் கேட்டால், இவை காரணப் பெயரல்ல இயற்பெயர் என இலக்கணமுரைக்கவும் தயங்கமாட்டார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம் தொடங்கி தேர்தல் மேடை வரையும்
செய்திப்பத்திரிகை தொடங்கி டீ.வி சனல்கள் வரையும்
இந்தப் புராணம்தான் புகட்டப்படுகிறது.
"சிங்கள- தமிழ்- முஸ்லிம்கள்"

என்ன காரணம் இந்த மாபெரும் யதார்த்த முரணுக்கு?

மொழியை வைத்து வகுக்கத்தொடங்கி,
மூன்றாமவர்களை ஊமை எனக்காட்டச் செய்த சதிமுயற்சியோ?
அல்லது
மூன்றாமவர் ஊமையாயிருந்ததால் விளைந்த விதி முயற்சியோ?
தெரியவில்லை.

எனக்கென்னவோ
மூன்றாமவனின் பாராளுமன்ற குறட்டைச் சத்தம்தான் இப்பாகு
பாட்டுக்கு வழிவகுத்திருக்க வேண்டும் எனத்தோன்றுகின்றது.

பாகுபடுத்தலுக்கான பாராளுமன்றக் கலந்துரையாடல் எப்பவோ நடந்திருக்கிறது.
அங்கே ஒரு கூட்டத்தினர் சிங்களத்தில் வாதிட்டிருக்கிறார்கள்;
அவர்கள் சிங்களவர்களாகிவிட்டார்கள்.
மற்றொரு கூட்டத்தினர் தமிழில் வாதிட்டிருக்கிறார்கள்; அவர்கள் தமிழர்களாகிவிட்டார்கள்.

அடுத்த கூட்டம் அங்கே குறட்டை விட்டிருக்கிறது.
அவர்களை குறட்டையர்கள் என்றால் அவ்வளவு நல்லாயிருக்காது
என்பதற்காக முன்னைய இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.
அம்முடிவிலேதான் "முஸ்லிம்கள்" எனும் பதம் முன்மொழியப் பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கியவன் எழுந்து கேட்டான்- என்ன இதுவென்று,
"மூன்றாமவர் - முஸ்லிம்கள்" என மோனை ஒற்றுமை காட்ட
அவனும் அப்படியே நம்பிவிட்டான்.

எதையும் வைத்து எதற்காகவும் இச்சிறு தேசத்தினைக் கூறுபோடத் தேவையில்லை.
இருப்பினும் நிரந்தரமாகிப் போன இந்த யுத்தம் நிலையற்றுப் போகும் வரைக்கும் நாம் இருவராகவே கைகோர்த்து நிற்கலாம்.

அது மொழியை வைத்து.
ஒன்று சிங்களவர்கள்
மற்றது தமிழர்கள்.

ஒன்றாகும் வரைக்கும் மூன்றைத் துறந்து இரண்டாய் நிற்போம்.
பிளவுகள் குறைந்து போனால்
பிரச்சினைகள் மறைந்து போகும்!

2009.01.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பிடித்த பூக்கள்

மனித மனம் பூப்போன்றது. மென்மையானது.

புன்னகையால் தேன் வார்க்கும் புனிதம் இவ்வுலகில் அதற்கு மட்டுந்தான் உண்டு.

அதற்கு கத்தியைக் கண்டால் பயம்.
துவக்கைக் கண்டால் பயம்.
பிறரைத் தூசிக்கவும் தெரியாது. பிறர் தூசித்தால் தாங்கவும் முடியாது; அது கசங்கிவிடும்.

அதற்குத் தெரிந்ததெல்லாம்-
உண்மை பேசுதல்
உதவி செய்தல்
பாராட்டுதல், புகழ்தல், யாதும் நல்லதே நினைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பொய் பேசத்தெரியாது. புறம் பேசத்தெரியாது. பொறாமை கொள்ளத் தெரியாது. பெருமையடிக்கத் தெரியாது. தீங்கு செய்வது கண்டால் ஏங்கிப் போய்விடும்.

இப்படியெல்லாம் எழுதவேண்டுமென்றுதான் எனக்கும் நீண்ட நாட்களாக ஆசை.
ஆனால், என்ன செய்ய; இங்கு அத்தனையும் தலைகீழாய்க் கிடக்கின்றன.

பூப்போன்றிருக்க வேண்டிய மனித மனங்களில் தீப்பிடித்து விட்டன. அந்தத் தீப்பிளம்பினால், ஓராயிரம் உயிர்ச் செடிகளில் பொசுங்கிய வாசனை...

மனித மனங்களில் அழுக்குகள் அத்துமீறிக்கிடக்கின்றன.
நல்ல வார்த்தைகளை உச்சரிக்க நாவு ஆசைகொண்டாலும் மனசோ நாற்றங்களையே நாவுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

நல்லது நினைப்பதில் நாட்டங்கொள்ள யாருமில்லை.
பொல்லாப்புக்களே இவ்வுலகில் பொங்கி வழிகின்றன.

துப்பாக்கி என்றாலே பயந்து ஒதுங்க வேண்டிய மனித மனமோ இன்று வாயினால் துப்பாக்கி ரவைகளைக் கக்கிக் கொண்டிருக்கின்றன.

கத்தி என்றாலே கசங்கிப்போக வேண்டிய மனித மனமோ இன்று வார்த்தைகளால் கீறிக் கிழித்துக் கொண்டிருக்கின்றன.

மனிதன் உதட்டிலொன்றும் உள்ளத்திலொன்றுமாய்ப் பேசுகின்ற வார்த்தைகளால் எத்தனையோ பேரின் வாழ்க்கை வசந்தமிழந்து கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தின் மெ(டே)மன்மையறிந்தொழுகும் மனிதர்கள் அரிதாகி விட்டார்கள்.

மனிதன் தன் வார்த்தைகளால் எத்தனை மலர்களைக் கசக்கிக் கொண்டிருக்கின்றான் தெரியுமா...?

பூக்களைப் பூக்களால் தடவவேண்டியவன் குறைந்த பட்சம் கைகளால் கூட அல்ல; முட்களால் வதைத்துக் கொண்டிருக்கின்றான்.

"யாகாவராயினும் நாகாக்க" எனும் திருவாக்கு
"நான் ஏன் அதைக் காக்க? " எனும் இறுமாப்பாய் எம்மவரில் எழுந்து நிற்கின்றது.
வார்த்தைகள் மட்டுமல்ல மனிதரின் செயற்பாடுகளும் செம்மையிழந்து கிடக்கின்றன.

இருவர் ஒரே வியாபாரம் செய்வர்.
இவன் அதிகம் உழைத்தால் அவன் பொறாமை கொள்வான்.
அவன் அதிகம் உழைத்தால் இவன் பொறாமை கொள்வான்.
இருவரையும் பார்த்து ஊர் பொறாமை கொள்ளும்.

வியாபாரத்தில் மட்டுமல்ல கல்வி, காதல், பிறமுன்னேற்றம் என்றவாறான அத்தனையிலும் இதே நிலைதான்.

தன்கடமையை ஏதோ அவன்பாட்டுக்குச் செய்து திரிவான் ஒருவன்.
வீதியில் நின்று அரட்டை அடிக்கும் "அநாவசியங்கள்" அவனை விமர்சிக்கும்.
தம் கடமையைச் செய்வதில் அநேக மனித மனங்கள் தவறிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவே எம்மத்தியில் விரிந்து கிடக்கும் விபரீதங்கள் அனைத்தும்...

எம்மிடையே மலிந்து கிடக்கும் பிரச்சினைகளுக்கெல்லாம் எமக்குள்ளேயே தீர்விருக்கிறது.

அது -

எமது மனத்தினை நாம் சலவை செய்ய வேண்டும்.

பிறர் மனத்தினை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.


தீப்பிடித்த மனங்களிலெல்லாம் பூப்பூக்க வேண்டும்.

அப்போதுதான் மானுடம் முழுக்க மணங்கமழும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் சொல் தட்டு!

தாய் இருவகைப்படும்.

ஒன்று அம்மா.
மற்றையது "சும்மா".

இவ்வுலகில் கலப்படமற்ற தூய்மை தாய்மையிடம் மட்டுந்தான் இருந்து வந்தது.
இன்றோ அது இரு ரகமாகப் பிரிந்து கிடக்கின்றது. ஓர் உண்மைத் தாயின் உன்னதங்கள் பல்வேறுவகையில் எம்மத்தியில் எடுத்துரைக்கப்பட்டுவிட்டன.

பிறர் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தால், சுவாரசியமின்றிப் போய்விடும்.

நல்ல அம்மா என்றால் இப்படித்தான் என்று யாவரும் நன்றாகவே அறிந்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று உருவாகி வரும் "சும்மா"க்கள் பற்றி சற்று சிந்திக்க வேண்டிக்கிடக்கிறது.

பிள்ளைப் பேற்றுக்காக ஏங்கிய காலங்கடந்து தற்போது கருவிலேயே கசக்கிவிடும் கலிகாலம் எம்மவரில் பலரைக் கவ்வியுள்ளது.

"தாய்மை" ஏதோ தாங்களின் அழகின் தூய்மையைக் கெடுத்துவிடும் எனக்கருதும் செயற்கை மழடுகளும் செகத்திலே உலாவிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

சிலர் தாய்மை எனும் கண்ணியத்தை அடைந்தும் அதனை அனுபவிக்கத் தவறிவிடுகின்றனர்.
ஒற்றை மாதத்திலேயே புட்டிப்பால் புகட்டி அன்னியனுக்கு அழுக்குத் தேய்க்க அவசரமாய்ச் சென்றுவிடுகின்றனர்.

தாய்மையிழைத்த முதற் துரோகத்தில் பிள்ளையோ தந்தியறுந்த வீணையாகிறது; வீணாகிறது!

கோழியை விட்டகன்ற குஞ்சினைக் காகம் காவிச் செல்வதனைப் போல தாயை விட்டகன்ற பிள்ளையினை சீர்கேடுகள் கவ்விக்கொள்கின்றன.

சீர் கேட்டின் வாயில் மாட்டிய பிள்ளையின் வாழ்வு சின்னாபின்ன மாகிவிடுகின்றது.

"எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
நல்லவனாவதும் தீயவனாவதும்
அன்னை வளர்ப்பினிலே...!"

என்கிறது ஒரு பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகின் நிகழ்கால நிர்க்கதிக்கு யார் காரணம் என்பதனை எம்மால் இலகுவாக ஊகித்துவிட முடியும்.

திருமண தேசத்தில் அரங்கேறும் ஆயிரக்கணக்கான சீதனப் பிரகடணங்களில் தொண்ணூறு வீதமானவைகளுக்குத் தலைமை தாங்குவது தாய்மார்கள்தான்.

அதில் மட்டும் பையன்களும் தாய் சொல் தட்டுவதே கிடையாது. இதனால் இந்தத் தாய்மார் எத்தனை காதல் நிலாக்களுக்குக் கருப்பு மை பூசியிருக்கிறார்கள் தெரியுமா...?

தாய்ப்பால் ஊட்டல், குழந்தை வளர்த்தல் என்பன இவர்களிடத்திலே நீண்ட காலக் கடன் அடிப்படையில் செய்யப்பட்ட சேவையாகி விடுகின்றது.

திருமண வயது வந்தால் அத்தனைக்கும் சேர்த்துக் கடன் அடைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலே மகன் நிறுத்தப்பட்டு விடுகின்றான்.

தன் மகனின் ஆண்மைக்கு தாய்மையே முன்னின்று விலை பேசுகிறது. தான் கொடுத்த கடனை அதிலிருந்து பெற்றும் விடுகின்றது.

"ஒரு தாய் தன் கற்பினை இழப்பது கூட தனது குழந்தைகளுக்காக -த்தான்" எனும் சினிமாப் பாடங்களெல்லாம் தற்போது பழைய சிலபஸ்களாகிவிட்டன.

அண்மையில் செவியுற்ற ஊர்ப் பாடமொன்று சொல்கிறது.
கணவனை இழந்த பெண்ணொருத்தி விபச்சாரம் செய்கிறாள். அவளுக்கு பள்ளியில் படிக்கும் பெண்பிள்ளையொன்றும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு சுகவீனம் ஏற்பட்டமையினால், வழமையான வாடிக்கையாளர் வருந்திவிடக் கூடாதென்பதற்காக வாய்ப்பு மகளைச் சென்றடைகிறது.

ஊர் பேசுகிறது; "நூலைப் போல சேலை..."
இது தாயின் ஏற்பாடு;
நிகழ்கால வேதனையின் வெளிப்பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "வாழ்க்கைப் பிச்சை போடுங்க..."

பூக்களை தரிசிக்க சம்பளம் கேட்கும் மானங்கெட்ட வண்டுகளைப் பற்றி சிந்திக்கும் போது சிந்தையில் தீப்பிடிக்கிறது.

வீடு
வாகனம்
வயல்
தோட்டம்
தோப்புக்கள்
என வெட்கம் கெட்டு நீட்டிய பட்டியலில் ஒன்று குறைந்தாலும் கெட்டி மேளச்சத்தத்தில் "நிறுத்து" எனும் பக்க வாத்தியம் ஒலித்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்வர்க்கம் அடிக்கும் சீதன முரசம் கேட்டு, திருமணப்போருக்கு நாங்கள் தயாரில்லை என எத்தனை பெண்வீட்டார்கள் பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?

"பெண்களைப் பெற்றவன் தருமம் செய்யக்கூடாது." ஏனெனில் அவனது பிள்ளைகள் திருமண வயதை அடையும் போது அவனே பிச்சை எடுக்க வேண்டிவரும்.
பிச்சைக்காரர்களெல்லாம் ஏன் தருமம் செய்யவேண்டும்?!

இது எமது ஆணினம் அறிவிக்கும் எதிர்வு கூறல்.

திருமண ஆசை படர்ந்து கருகிவிட்ட நிலையில் இருக்கும் ஓராயிரம் பெண்களின் கண்ணீர் இன்னும் எம் ஆணினத்தின் கல் நெஞ்சைக் கரைத்துவிடவில்லை.

தொடரும் இந்த அல்லலில் மானுட நீதி அலைக்கழிக்கப்படுகிறது.

முன்னரெல்லாம் காதற் பூச்சூடிய திருமணங்களில் சீதன நாற்றம் கலக்காதிருந்தது. தற்போதோ அதிலுங் கூட அழுக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.

ஒரு தாய்க்கு எப்போது பெண்பிள்ளை பிறக்கிறதோ அன்றிலிருந்தே தந்தையின் முகத்தில் கவலையும் அப்பிக்கொள்கிறது.

எமது ஆணினம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

எவன் அதிகம் படித்தானோ, பட்டம் பதவிகளிலிருக்கிறானோ, அந்தஸ்த்துடன் வாழ்கிறானோ அவனே அதிகம் சீதனமும் கேட்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்கிறதிங்கே....

படுக்கையறைச் சுகத்தை பணம் கொடுத்து அனுபவிக்கப் பதுங்கித் திரிகிறது ஓர் ஆண் கூட்டம்.
படுக்கை அறைச் சுகத்தை பணம் தந்தால்த்தான் அனுபவிப்பேன் என்கிறது இன்னொரு ஆண் கூட்டம்.

தற்போது புதிய கூட்டமொன்று உருவெடுத்துள்ளது.
அது-
சீதனம் கொடுப்பதற்கென்றே கங்கணம் கட்டியலையும் காமுகர்களின் கூட்டம்.

ஒரு வைத்தியன் இருக்கிறான்.
இவனுக்கு ஒரு பெண்ணுடன் நிச்சயதார்த்தம் அரங்கேறுகிறது.

ஒரு தந்தை தனது பிள்ளைக்கு மணமகன் தேடுகிறான்.
அந்த வைத்தியனிடம் இவன் கூறுகிறான்,
அவர்கள் தருவதை விடவும் நான் உங்களுக்கு பத்து லட்சம் அதிகம் தருகிறேன். எனது மகளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்.

முடிவு...?

முன்னைய நிச்சயதார்த்தம் நிராகரிக்கப்படுகிறது.
இரண்டாமிடத்தில் திருமணம் நிகழ்கிறது!

பெண்ணொருத்தியை காதலித்து ஏமாற்றுகிறான் ஒருவன். காதலின் பெயரில் அரங்கேறிய விபச்சாரத்தில், கருவுற்ற அப்பெண் தன்னை ஏமாற்றியவன் மீது வழக்குத் தொடுக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குக் கட்ட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையை உனக்குச் சீதனமாகத் தருகிறேன். எனது மகளை மணந்து கொள் என்கிறது ஒரு குரல்!

ஒருவன் அதிகம் சீதனம் வாங்கித் திருமணம் முடித்தான். அவனோ தன் தங்கைக்கு மணமகன் தேடுகிறான்;
தரகரிடம் பேசுகிறான்,

" எதுவுமே கேட்காத 'நல்ல' பையனாகப்பார்த்து விசாரிங்க..."

என்ன நடக்கிறதிங்கே....

நீதித்தாய் மானுடத்தின் காலிலே மண்டியிட்டு ஒப்பாரி வைக்கிறாள்;

"தயவு செய்து என்னை வாழவிடுங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது ரத்தம் பாய்ச்சுவோம்!

இளைஞர்கள்!

இவர்கள்தான் சமுதாயத்தின் இதயம். இவர்களில்தான் தங்கியிருக்கிறது நாளைய உதயம்.

சமூகத்திற்குப் புது ரத்தம் பாய்ச்ச வேண்டியவர்களும் இவர்கள்தான். சிந்தனா உதயத்தில் புதுக் கிரணங்களைப் பீய்ச்ச வேண்டியவர்களும் இவர்கள்தான்.

இளைஞர்களின் வேகம் மின்னலை மிஞ்ச வேண்டும்!
இதனைப் பார்த்து அநீதிகள் அத்தனையும் அஞ்ச வேண்டும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை உண்மையிலேயே இறைவன் வழங்கிய வரம்தான். அது ஒரு தரம்தான்.

எனவே இளமை திட்டமிடலுடன் நகர்த்தப்பட்டால் சமுதாயத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அத்தனை அழுக்காறுகளையும் அகற்றிவிட முடியும்.

உலகப்புனர் நிர்மானத்திற்கான புனிதத்துவம் இளைஞர்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்கள் மனசுவைத்தால் எதை வேண்டுமானாலும் சாதித்துக் காட்ட முடியும். அப்படியானதொரு அபார சக்தி இளமைக்கிருக்கிறது.

நீதி, நேர்மை, நடு நிலைமை, துணிவு, மனச்சாட்சி அத்தனையும் இப்பருவத்தில்தான் ஆரோக்கியம் பெறுகின்றன.

ஆனால் இங்கு எமது இளைஞர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்...?

இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் -
இளைஞர்களென்றால் காதல் காதல் என்று கண்டபடி அலைய வேண்டும்.
சிகரட் புகைக்க வேண்டும்.
கூட்டமாய்ச் சேர்ந்து மதுசாரம் அருந்த வேண்டும்.
வீதியில் நின்று அரட்டை அடிக்க வேண்டும்.

றூம் எடுக்க வேண்டும். அங்கே ஒன்றாகக் கூட வேண்டும்.
அச்சமயம் பந்தயம் கட்டித் திருட வேண்டும்.
அதிலே வெல்ல வேண்டும்.
தோற்பவர்கள் சிகரட் வாங்க வேண்டும்.
அதனை ஒன்றாகச் சேர்ந்து புகைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வட்டத்தின் சிந்தனா ஆரையினை எம் இளைஞர்கள் எப்போதுதான் அதிகப்படுத்தியிருக்கிறார்கள்...?

ஒரு போதும் இல்லை.

அன்றைய கருப்பு - வெள்ளைச் சினிமாக் காட்சி தொடங்கி இன்று வரையான கம்பியூட்டர் கிரப்பிக் காட்சிகளிலும் இளம் நண்பர்கள் கூட்டத்தைக் காண்பிக்க மேற்சொன்ன அதே வட்டமே வரையப்பட்டு வருகின்றது.

எனவே எமது இளைஞர்கள் எத்தனையோ தசாப்தங்களாக மாற்றமின்றி அப்படியே கிடக்கிறார்கள்.

சமுதாயத்தின் இதயமே இவ்வாறு ரத்தமிழந்து கிடப்பதனால்த்தான் எம் சமூகம் எல்லா விடயங்களிலும் சோகையாய்க் கிடக்கிறது.

இளைஞர்கள் தாங்களின் இளமைக்கு இன்னும் கண்ணாடி பிடிக்கத் தெரியாதவர்களாய், தாங்கள் யார் என்பதனை அறியாதவர்களாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

முத்தைச் சுமக்கும் சிற்பிகளாவது சுண்ணாம்பா(க்)கப் பயன் படுகின்றன - இளமை எனும்
சொத்தைச் சுமக்கும் இவர்கள் எதுவாகப் பயன்படுகிறார்கள்?

இளைஞர்கள் இந்நிலைமைகளிலிருந்து மாற வேண்டும்.
இளைமையின் உன்னதத்தை உலகிற்குக் கூற வேண்டும்.

தாங்களின் சிந்தனையைச் சலவை செய்வதற்கான முயற்சிகளில் மும்முரமாக இறங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக -
அதிகமான நூல்களைப் படிக்க வேண்டும்.
வாசிப்பொன்றே வழமையாக்கப்பட வேண்டும்.
யாவற்றிலும் புலமை பெறவேண்டும்.

சிகரட் ஏந்தும் கைகள் அத்தனையும் பேனா பிடிக்க வேண்டும்.
நிறைய எழுத வேண்டும்.
இளைஞர்கள் ஏந்திய பேனா அநீதிகளுக்கெதிரான ஆயுதமாக மாற வேண்டும்.

அந்தப் பேனாவின் அதட்டலில் அநீதிகள் அத்தனையும் கைகட்டி நிற்க வேண்டும்.
அதிலே நம் சமுதாயம் கைகொட்டி மகிழ வேண்டும்.

உழைப்பிலே நாட்டங்கொண்டு உதிரத்தைப் பிழிய வேண்டும்.
ஆயிரம் தடை வந்தாலும் சிகரத்தை அடைய வேண்டும்.

தனக்கு மட்டும் உழைக்கும் தப்பான சிந்தனையை அப்படியே களைய வேண்டும்.
இளைய தலைமுறை ஊருக்கே உழைக்க வேண்டும்.

இளைஞர் நாம் கூடி இங்கே-
நீரையும் நிலத்தையும் உழுதல் வேண்டும்.
ஊருக்கு நல் வரங்கள் கேட்டு
இறையை தினம் தொழுதல் வேண்டும்.

பஞ்சம் அகல வேண்டும். பட்டினி தீர வேண்டும். யாவும் நலம் பெற இளைஞர் யாம் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் செய்ய வேண்டும். அதிலே அகிலமே உய்ய வேண்டும். பரம்பரை முழக்கம் இனி செல்வாக்கு இழக்க வேண்டும்.

மூத்தோர்கள் ஓய்வெடுக்க இனி இளைஞர் நாம் தோள் கொடுப்போம்.


பழைமைகளைப் பட்டை தீட்டி புதுமைகள் படைத்திடுவோம்.

இளமை என்றால் இதுதான் என்று - நல்
நிலைமையை நிறுத்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடிகள்!

இறைவா!

என்னால் இவ்வுலகில் தனியாக வாழ முடியாது.

நான் எப்போதும் மனிதர்களுடன் சேர்ந்து வாழத்தான் ஆசைப்படுகிறேன்.
தயவு செய்து எனக்கு மனிதர்களைக் காட்டித்தா.

நானும் பல தடவைகள் முயற்சி செய்துவிட்டேன். இன்னும் அவர்களை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நானும் பேசாத நபர்களில்லை; பழகாத ஆட்களில்லை. இன்னும் மனிதர்களைத்தான் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப் பருவத்தில் மாணவர்களுடன் பழகியிருக்கிறேன்.
பல தடவைகள் ஆசிரியர்களுடன் பழகியிருக்கிறேன்.
வேலைத்தளங்களில் அதிகாரிகளுடன் பழகியிருக்கிறேன்.
வெளியிலே பாமரர்களுடன் பழகியிருக்கிறேன்.

இவ்வாறாக பல்வேறுபட்ட மனித ரூபங்களுடன் பழகியிருக்கிறேன்.
என்ன பயன்...

நான் தேடிக் கொண்டிருப்பது மனித உள்ளங்களையல்லவா...?

இறைவா!

தயவு செய்து எனக்கு மனிதனைக் காட்டித்தா.

இங்கு ஒருவனையொருவன் வெட்டுகிறான், குத்துகிறான், சுடுகிறான், கொல்லுகிறான்.

எனக்கோ ரொம்பப் பயமாக இருக்கிறது.

இவர்கள் நிச்சயமாக மனிதர்களாக இருக்க முடியாது.

ரத்தக் காட்டேறிகளையெல்லாம் என்னால் மனிதர்களாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

களவு - கொலை
கற்பழிப்பு - தட்டிப்பறிப்பு
ஏமாற்றுதல் - ஏளனம் செய்தல்
போன்ற பதங்கள் அத்தனையினையும் பதம் பார்த்துக் கொண்டிருக்கும் பாவிகள்தான் இங்கே நிறைந்து கிடக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ளவர்களுக்கெல்லாம் பொறாமைப் படத்தெரியும். அவதூறு பேசத் தெரியும்.

பிறரைத் தூற்றத் தெரியும், தூசிக்கத் தெரியும்.

மற்றவரைத் துன்புறுத்துவதோ இவர்களுக்குக் கைவந்த கலை.

இறைவா!
இவர்களுடன் சேர்ந்து என்னால் வாழ முடியாது.

எனக்குத் தயவு செய்து மனிதர்களைக் காட்டித்தா.

நான் எப்போதும் மனிதர்களுடன் சேர்ந்து வாழத்தான் ஆசைப் - படுகிறேன்.

ஒருவனுக்குத் துரோகம் செய்வதென்றால், அவனைக் காட்டிக் கொடுப்பதென்றால், அவனது வளர்ச்சியைத் தடுப்பதென்றால் இங்குள்ளவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?

இவற்றுக்கெல்லாம் கூட்டமாகக் கூடித் திட்டம் தீட்டும் இவர்களால் எனக்கு மனிதனைக் காட்ட முடியுமா?

அதிகாலை எழுந்தது முதல் இரவில் தூங்கும் வரைக்கும் இவர்களின் எண்ணம், பேச்சு, செயற்பாடு அத்தனையிலும் குடியிருப்பது சுயநலமும் பிறரை நோவினை செய்வதுமே தவிர வேறொன்றுமில்லை.

ஏன், இவர்களின் தூக்கத்தில் வரும் கனவு கூட ஒருத்தனை எப்படி வீழ்த்தலாம்? அவனை எவ்வகையில் தாழ்த்தலாம் என்பது பற்றியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமதினத்திற்கே படுகுழி தோண்டும் இவர்கள் ஒரு போதும் மனிதர்களாக இருக்க முடியாது.

நான் மனிதர்களுடன் சேர்ந்து வாழத்தான் ஆசைப்படுகிறேன்.

இறைவா!
தயவு செய்து எனக்கு மனிதர்ளைக் காட்டித் தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# “பெரிய மனுசர்கள்?”

அதிகாரம்! அதிகாரம்!! அதிகாரம்!!!

இது சாதாரண விடயமன்று.
இது மனிதனின் சுயரூபத்தைக் காட்டும் கண்ணாடி.

இது கொண்டே மனிதன் எத்துணையானவன் என அளந்து விடலாம்.

இதனால் மனித மனத்திலே ரத்தக் கோடு போடவும் முடியும்.

சந்தோசம் பயணிக்க நல் ரோடு போடவும் முடியும்.

இது இருவேறு முனை கொண்ட ஆயுதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாயுதத்தினை ஏந்தியோர்கள் எந்த முனையினால் கீறுகிறார்களோ அதிலேதான் அவர்களின் சுய ரூபம் வெளிப்பட்டுத் தோன்றும்.

எமது அதிகாரிகளில் பெரும்பாலானோர் சந்தோசம் பயணிப்பதற்கான ரோடு வரைபவர்களாக இல்லை.

மாறாக மனித மனத்திலே ரத்தக் கோடு வரைபவர்களாகவே உள்ளார்கள்.

பொதுமக்களில் அதிகப் படியான கண்ணீரை வரவழைத்த பெருமை இவர்களையே சாரும்.

எந்த அலுவலகங்களிலும் அவதியுறாமல், பொதுமக்கள் தம் அலுவல்களை நிறைவு செய்வதாய்த் தெரியவில்லை.

அதிகாரத்தின் அதட்டலில் அல்லலுறும் அப்பாவி ஏழைகளின் கண்ணீர் இன்னும் உறை கழற்றப்படாத வாளாகவே கிடக்கின்றது.

தாம் ஏதோ இலவச ஊழியம் செய்வதாய் அதிகாரிகள் யாவரும் அலுத்துப் போகிறார்கள்.

ஏமாற்றுதல் எனும் பதம் அதிகாரிகளின் நெற்றியில் ஒட்டப்பட்ட முத்திரை!
மனிதாபிமானத் தலைக்கு அவர்கள் இட்டிருப்பது பெரியதொரு முகத்திரை!!

விண்ணப்பங்கள் சமர்ப்பித்து வருடங்கள் கடந்தாலும் விடையாய் வரும் ஒரே வார்த்தை. "பிஸி!".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரை என்ற பெயரில் பணக்காரத் தலைகளுக்கு அவர்கள் காட்டும் பாரபட்சத்தினால் நீதி பஞ்சாய்ப் பறக்கையில், வரிசை பேணிய ஏழைகளின் மனமோ நெருப்பாய் எரிகிறது.

விதிகள், ஒழுங்கு முறைகள், நிபந்தனைகள் எனச் சட்டம் பேசும் சில அதிகாரிகளால் மனித மனங்களை விடவும் வெறுங் காகிதங்களே அதிகம் நேசிக்கப்படுகின்றன.

பொதுமக்களில் சந்தோசத்தைப் பொங்க வைக்கும் பொறுப்பிலிருப்பவர்கள் இங்கோ அவர்களை ஏங்க வைத்துக் - கொண்டிருக்கிறார்கள்.
பணக்காரர்களிடம் வாங்குவதற்கே நீண்டு பழகிய அதிகாரிகளின் கை ஏழைகளிடமோ அதட்டுவதற்கும் அடிப்பதற்குமே நீளுகின்றன.

பணம் என்ற ஒன்றால் தமது கடமையினையும் பொது மக்கள் பயனடையும் காலத்தினையும் தீர்மானிக்கும் அதிகாரிகள் இருக்கும் வரைக்கும் நேர்மையானவர்களின் எந்தப் பிரச்சினைகளும் நேரத்திற்கு முடியப்போவதில்லை.


அதிகார ஆசனம் இங்கே கிடைத்துவிட்டால் -

சிலருக்கு, குரங்கிற்குப் பூ மாலை!
சிலரின், தோளின் மேல் பல மாலை!!
எது எவ்வாறாயினும் பொது மக்களின் திருப்திக்கே அவர்களின் வேலை!!!

இந்நிலையினை எம் அதிகாரிகள் தம் அகத்தில் பதிக்கும் வரைக்கும் எமதல்லல் மறைந்துவிடப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீரும் நெருப்பும்

இந்த உலகத்தில் எல்லா மனிதர்களும் அணிந்து கொள்கிற இரண்டு ஆடைகளிருக்கின்றன.

ஏதோ ஒரு வகையில் மனிதன் இவையிரண்டையும் மாற்றி மாற்றி அணிந்துகொண்டுதானிருக்கிறான்.

இவையிரண்டும் உடல் அணிந்து கொள்கின்ற சாதாரணமான ஆடையல்ல.
உள்ளம் அணிகின்ற ஆடை; இல்லை இல்லை, உள்ளத்திற்கு நாம் அணிவிக்கின்ற ஆடை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது -
ஒன்று சந்தோசம்.
மற்றையது கவலை.

இவையிரண்டுக்கும் இடையில்தான் மனிதவாழ்வு பயணித்துக் கொண்டிருக்கிறது.

எவருமே இவற்றில் ஏதாவதொன்றினை நிரந்தரமாக அணிந்து கொள்வது கிடையாது.

ஒருவன் சில நாட்கள் சந்தோசத்தில் சுதி பாடுவான். பின்னர் அவனே துக்கத்தை எடுத்து தன் நெஞ்சில் சூடுவான்.

உண்மையிலேயே இவையிரண்டும் தாமாக வந்து எம்மில் உட்கார்ந்து கொள்வதில்லை.

எமது விருப்பமின்றி உள்ளக்கதவுகளை உடைத்து உள்ளேறுவதுமில்லை.

சந்தோசமோ துக்கமோ இவையிரண்டுக்கும் நாமே காரணம்.

இந்த உலகில் எமது சந்தோசமும் கவலையும் எமது மனப்புத்தகத்தில் எம்மால்த்தான் வரையப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சந்தோசத்தினையும் நாம்தான் அணிந்து கொள்கிறோம்.
அதுபோல கவலையினையும் நாம்தான் அணிந்து கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசத்தை விரும்பி அணிகிறோம்.
கவலையை விரும்பாமல் அணிகிறோம்.

இவையிரண்டும் முகக்கண்ணாடியில் வெவ்வேறு விம்பத்தினைக் காட்ட வல்லன.

சந்தோசத்தின் விம்பம் புன்னகையாய்ப் பிரதிபலிக்கும்.
கவலையின் விம்பம் கண்ணீராய்ப் பிரதிபலிக்கும்.

துக்கம் கூடக் கூட உடலில் உஷ்ணம் அதிகரிக்கும்.

எமது உடலிலும் உள்ளத்திலும் உஷ்ணம் அதிகரித்தால் எமது ஆயுள் ஒவ்வொன்றாய்ப் பொசுங்கி விடும்.

ஒரு வகையில் எம்மில் பலர் தவணை முறையில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் கவலை! கவலை!! கவலை!!!

கவலை, மலைபோல் இருக்கும் எம்மையும் கறைத்துவிடும் சக்தி வாய்ந்தது.

இரும்பு மனசையும் உருக்கிவிடும் உஷ்ணம் கவலைக்கிருக்கிறது.

கவலையில் உழல்பவனக்கு -
ஊர் பிடிக்காது.
உறவுகள் பிடிக்காது.
அன்னை பிடிக்காது.
தந்தை பிடிக்காது.
ஏன், தன்னையே பிடிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வசீகரம் அவனில் வற்றிப் போய்விடும்.

கவலை என்பது பிறராலோ வேறெந்த சக்தியினாலுமோ எம்மில் வைத்துக் கொள்ளுமாறு சுமத்திவிடக் கூடியதன்று.

இதனைத் தூக்கியெறிவதும் சூடிக் கொள்வதும் முழுக்க முழுக்க எம்மில்தான் தங்கியிருக்கிறது.

"பண்படாத எவரும்தான் புண்படுவர்" என்பர்.

அனைத்துக்கும் காரணம் மனசுதான். எதற்கும் கலங்கிவிடும் மனதில் எந்த விடயமானாலும் ஓர் தெளிவு காண்பதரிது.

தூசு விழுந்தாலும் தூய்மையற்றுப் போகும் சிறு குட்டையைப் போன்றல்லாது கல் எறிந்தாலும் கலங்கிடாத கடல் மனது வேண்டும்.

கவலைப்பட ஆயிரம் வழிகளை உருவாக்கிக் கொள்ளும் நாம் சந்தோசப்பட இருக்கும் பல்லாயிரம் வழிகளை மறந்து விடுகிறோம்.

ஆண் குழந்தை என்றல்லோ நினைத்தோம் பெண் குழந்தையல்லவா பிறந்திருக்கிறது என்று கவலை கொள்பவர்கள், எமது குழந்தை ஊனமாகப் பிறக்கவில்லையே என்று சந்தோசப்பட வேண்டும்.

ஊனமான குழந்தையினைப் பெற்றோர், எம் குழந்தை உயிருடன் இருக்கிறதே என்று சந்தோசப்பட வேண்டும்.

இறந்தே பிறந்த குழந்தையின் பெற்றோர், எம் குழந்தை இந்தக் கொடூர உலகத்தைத் துறந்தே விட்டதென்று சந்தோசப்பட வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சுவனத்தில் இருக்கிறதென்று சந்தோசப்பட வேண்டும்.

மானிடன் மனசு வைத்தால் எதிலும் சந்தோசம் காணலாம்.

எங்கும் சந்தோசம் காணலாம்.

சின்னதாய் ஒரு கீறல் வந்து எம் சந்தோசத்தை ஒரு போதும் சின்னாபின்னப் படுத்திவிடக் கூடாது.

எதையும் தாங்கும் இதயம் கொண்டால்
வதையும் தாங்கும் வாழ்வு கண்டால்
நல் -
வரலாறு வரையப்படும் எம்மால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் உயிரானது

உலகப் பந்தை உருட்டி விளையாடும் ஒரு சாதனம்.

உலகிலே பெறுமதி கணிக்கப்பட முடியாத இரண்டு விடயங்களில் ஒன்று.

எவர் என்ன பேசினாலும் எது எப்படி நடந்தாலும் தனது காரியத்தைக் கச்சிதமாய் நிறைவு செய்து கொண்டேயிருக்கும் ஒரு சக்தி.

தீ மூட்டிய அதே கையினால் நீர் வார்க்கவும்
தென்றலான அடுத்த கணமே புயலாகவும்
இதனால்த்தான் முடியும்.

மனிதனுக்கு மனிதன் ஆட்டங்காட்டித் திரிகிறான்.
இது நினைத்தால் மனிதனையே ஓட்டங்காட்டி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச் சரியாக ஆள்பவனுக்குத் தோள் கொடுக்கும்.
தன்னை மறந்து கண்டபடி வாழ்பவனுக்கெதிராக வாள் எடுக்கும்.

இது - காலம்!

தன்னிலே சங்கமமாகியிருக்கும் உயிர்களை -
தங்கமாக்குவதும் காலம்தான்.
நரமாக்குவதும் காலம்தான்.

காலத்தை வீணடிப்பவன் வாழத் தெரியாதவன்.

காலம் ஒரு நிலவு; பௌர்ணமியை நாம் அனுபவிக்க வேண்டும்.

காலம் ஒரு காற்று; அடிக்கும் போதே நாம் தூற்றிக் கொள்ள வேண்டும்.

காலம் ஒரு சுட்ட இரும்பு; ஆறுவதற்கு முன்னர் அதனைத் தட்டிக் கொள்ள வேண்டும்.

காலம் ஒரு நிச்சயிக்கப்பட்ட மணவாளன்; மனசு மாறுவதற்கு முன்னர் அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும்.

காலம் பொன்னானது. காலம் பொன்னானது என்று எல்லோரும் காலத்திற்கு பெறுமதி கணித்த காலத்தை காலம் கரைத்துவிட்டது.

காலத்தை ஆளுபவர்களும் சரி, காலத்தை வீணடிப்பவர்களும் சரி, தற்போது ஏற்றுக் கொண்டுவிட்டனர்;

" காலம் உயிரானது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கூட காலத்தின் ஏற்பாடுதான்.

தன்னைப்பற்றி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் படியாக காலம் தன்னை நிரூபித்திருக்கிறது.

ஓர் அங்குலத் தங்கத்தைப் பணமிருந்தால் மிக இலகுவாக வாங்கிவிடலாம்.
ஆனால் ஒரு கணத்தைக் கூட எவ்வளவு பணம் கொடுத்தாலும் திருப்பிப் பெற முடியாது; போனது போனதுதான்.

இங்குள்ள மனிதன் நினைத்தால் அடிமைகளைக் கட்டிப் போடுவதனைப் போன்று அரசனையும் கட்டிப்போட்டு விடுவான்.

ஆனால் காலத்தைக் கட்டிப்போட எந்தக் காலனும் மனிதர்களிடத்தில் இல்லை.

காலம் ஒரு கண்ணாடி; நாம் எப்படியோ அப்படியே அது காட்டும்.

நாம் நல்லது நினைத்தால் நம்மை நல்லவனாக்கும்.

நாம் கெட்டது நினைத்தால் நம்மைக் கெட்டவனாக்கும்.

அதிகம் உழைத்தால் செல்வந்தனாக்கும்.

சோம்பிக்கிடந்தால் யாசகத் தட்டை எம்மீது தூக்கியெறியும்.

எல்லாமே தன்னைப் பயன்படுத்தப் பயன்படுத்த தேய்ந்து போகும்; ஓய்ந்து போகும்.
காலம் மாத்திரம் அவ்வாறானதன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காலத்தை நன்றாய் ஆளும் போதுதான் அது எம்மை வாழ வைக்கிறது.

நாம் காலத்தைக் கசக்கிப்பிழியும் போது அது உளியாக மாறி எம்மைச் சிற்பமாக்குகிறது.

நாம் காலத்தைக் கண்ணியப்படுத்தும் போது அது எமக்குப் புண்ணியம் தந்து புகழைப் பரிசளிக்கிறது.

காலம் -
தன்னைப் புரிந்தவனுக்கு நண்பன்;
புரியாதவனுக்கு எதிரி.

ஆனால் இருவரைப் பார்த்தும் புன்னகைக்கும்;

முதலாமவனைப் பார்த்துப் புளகாங்கிதத்தினால் புன்னகைக்கும்.
இரண்டாமவனைப் பார்த்துக் கிண்டலாய்ப் புன்னகைக்கும்.

காலத்தைக் கேலி செய்வோரின் புகழ்த்தட்டு எப்போதும் காலியாகவே கிடக்கிறது.

காலத்தைக் காரியமின்றிக் கரைப்பவன் வெற்றிப்பால் அருந்த அக்கரை காட்டாதவன்.

எம் இறந்தகாலம் கச்சிதமாய்க் கையாளப்பட்டிருந்தால் எமது வரலாறு இந்நேரமெல்லாம் வனப்பு நிறைந்ததாயிருந்திருக்கும்.

செகத்திலே எம் சரித்திரம் செம்மையாய்ச் செதுக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே -
கடந்தவை எண்ணி நிகழ்காலத்தை நிந்திக்காமல் எதிர்காலத்தை சிந்தித்து நிகழ்காலத்தையாவது கால வீணடிப்பின்றி கண்ணியப் படுத்துவோம்.

காலம் உயிரானதென்று உரக்கச் சொல்வோம்!
காலத்தை கௌரவித்து யாதும் வெள்வோம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணங்கொடுத்து உயிர் விற்றல்

சிகரட்!

இளைஞர்களின் விரலிடுக்கில் இன்று வேர்விட்டு நிற்கிறது.

சில முதியோர்கள் தாங்களின் மனைவியை விடவும் இதனையே பெரிதும் நேசிக்கிறார்கள்.

பள்ளி செல்லும் சிறுவன் கூட இதனைப் பரீட்சித்துப் பார்க்கிறான்.

இளைஞர்கள் எங்காவது கூட்டமாக நின்றால் அங்கே சிகரட் புகையும் மூட்டமாகக் கிளம்புவதனைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுகிறோம்; அது வயிற்றின் தேவை.

தூங்குகிறோம்; அது உடம்பின் தேவை.

அழுகிறோம், சிரிக்கிறோம்; அது உள்ளத்தின் தேவை.

புணர்கிறோம்; அது காமத்தின் கட்டளை.

புகைக்கிறோம்; ..........................?

மனிதன் காரணமின்றிச் செய்யும் காரியங்களில் புகைத்தலுக்-குத்தான் உலகில் முதலிடம்.

இன்று இளைஞர்கள் நிறையப் பேர் சிகரட்டைத் தின்று கொண்டிருக்கிறார்கள்.
மனிதர்களில் நிறையப் பேரை சிகரட்டும் தின்று கொண்டிருக்கிறது.

பள்ளிக் கூடக்காலத்திலிருந்தே சிகரட் புகைக்கப் பழகிய நண்பனொருவனை நீண்ட காலத்திற்குப் பிறகு சந்தித்தேன்.

நீண்ட காலமாக நான், எனது தலையைப் போட்டுப் பிய்த்துக் கொண்ட விடயம்தனை அவனிடம் கேட்டேன்.

ஏன் நீ சிகரட் புகைக்கிறாய்?
அதனால் உனக்கு என்ன லாபமிருக்கிறது?
இது உனக்கு வீண் விரயமாகத் தெரியவில்லையா?
இதனால் வரும் விளைவுகளைப் பற்றி நீ சிந்திக்கவில்லையா?

எனது வினாக்களை அவனை நோக்கி அள்ளியெறிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவன் சொன்னான்,

"உன்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லனும்னா, முதல்ல ஒரு தம் அடிக்கனும்..."

என்ன செய்ய...? அவனிடம் மறுவார்த்தை பேச எனக்கு மனசு வரவில்லை.

இதுபோல இன்னொரு விடயத்தினையும் எனது அனுபவம் பதிவு செய்திருக்கிறது.

ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது சைக்கிலில் பெட்டி கட்டி மரக்கறி வியாபரம் செய்யும் ஒருவர் நான் அமர்ந்திருந்த இருக்கைக்கெதிரில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்.

அவசரமாக சாப்பிட்டு முடித்துவிட்டு சிகரட் ஒன்று தருமாறு கடையில் வேலை செய்த பையனொருவனிடம் கேட்டார்.

எனக்கெதிரே அமர்ந்திருந்த அவரை நோக்கி நான் பேச்சுத் தொட்டேன்.

நீங்கள் சிகரட் புகைக்கத் துவங்கி எவ்வளவு காலமிருக்கும் என்று கேட்டேன்.

"இருபது இருபத்தைந்து வருசமிருக்கும். ஏன் தம்பி கேட்கிறாய்?" எனக்கேட்டார்.

"இல்ல, இவ்வளவு காலமும் நீங்க சிகரட் குடித்த காசெல்லாம் சேமித்து வைத்திருந்தால் இப்ப இந்த சைக்கிலில் இப்படிப் பெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி வியாபாரம் செய்ய வேண்டிய தேவை வந்திருக்காது. இந்நேரமெல்லாம் சொந்தமாக ஒரு லொறியே வாங்கியிருக்கலாம்." என்று விளக்கம் கொடுத்தேன்.

அதற்கு, உனது அப்பா சிகரட் குடிக்கிறதில்லையா என அவர் என்னிடம் கேட்டார்.

நான் சற்று பெருமிதத்துடன் இல்லை எனக் கூறவே,

"அப்ப உங்கக்கிட்ட எத்தனை லொறி ஓடுது?"

என அவர் கேட்டுவிட்டு, சிரித்தவாறே பையன் கொடுத்த சிகரட்டைத் தனது சட்டைப்பையிலிட்டு எழுந்து சென்றார்.

நானோ கதிரையை விட்டு எழுந்திருக்க முடியாதவனாய்...

இப்படியாக இந்த சிகரட் விஷயத்தில் நிறையப் பேர் விதண்டாவாதம் செய்துகொண்டேயிருக்கிறார்களே தவிர யாரும் இதன் தீய விளைவுகள் பற்றி சிந்திப்பதாய்த் தெரியவில்லை.

நிறையப் பேர் புகையை வெளியேவிட்டு உயிருக்கான பகையை உள்ளே அழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நிறையப் பேரின் உயிரை இந்தப் புகை மேலழைத்துச் சென்றிருக்கிறது.
புகைக்கும் எவருமே இது பற்றி சிந்திப்பதாய்த் தெரியவில்லை.

ஏராளமான இளைஞர்கள் சிகரட் புகைப்பதனை ஆண்மையின் அடையாளம் எனவும் ஆண்மைக்கதுவோர் அலங்காரம் எனவும் எண்ணிக்கிடக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரட் புகைக்கும் விடயத்தில் மட்டும் இவர்கள் எச்சில் சாப்பிடத் தயங்குவதுமில்லை; வெட்கப்படுவதுமில்லை.

ஒரு சிகரட்டை ஒரு கூட்டமே மாறி மாறி உறிஞ்சும் போது எனக்கென்னவோ கூட்டமாய்ச் சேர்ந்து ஒரு பெண்ணைக் கற்பழிக்கும் கோரக் காட்சியைச் சினிமா காண்பிக்குமே, அந்த ஞாபகம்தான் வருகிறது.

அதுமட்டுமா, அவ்வாறனவர்களுக்கு நீதிமன்றத்தில் எப்படித் தீர்ப்பு வழங்கப்படுமோ அது போலவே இவர்களுக்கும் தீர்ப்பு வழங்கப் படுவதனைப் போன்றதொரு ஆசைக் காட்சியும் எனது மனத் திரையில் ஒளிபரப்பப்பட்டுவிடுகின்றது.

புகைப்பிரியர்களால்த்தான் காற்றுமண்டலம் களங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவர்களின் புகைப்பழக்கத்தினால் சூழலிலுள்ள ஏனையவர்களையும் தீங்குகள் கவ்விக் கொள்கின்றன.

"Passive Smoking" இனால், சிகரட்டைத் தொட்டும் பார்க்காத எத்தனையோ மனங்கள் பாதிப்புறுவதனை நினைக்கும் போது கணக்கின்றிப் பாலியல் லீலைகள் புரிந்து எயிட்ஸினை வாங்கிக் கொண்ட தாயொருத்தியின் வயிற்றில் பாவமாய் ஒரு குழந்தை எயிட்ஸுடன் பிறந்து மடியும் பத்திரிகைச் செய்தியினை உள்ளம் உவமையாய் உமிழ்கிறது.

புகை பிடிப்பவர்கள் நாளாந்தம் ஐம்பது தொடக்கம் நூறு ரூபாயினை இதற்காகச் செலவு செய்வதனையும் நாளாந்தம் நூறு ரூபாய் உழைக்க ஏழை ஒருத்தன் இங்குபடும் பாட்டினையும் எண்ணிப் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கையில் என்னையறியாமலேயே கண்கள் கசிந்து போகின்றன.

அதிலும், கஷ்டப்பட்டு சிறுதொகை சம்பாதிப்பவன் கூட அப்பணத்தினைப் புகையாய்ப் பறக்கவிடுவதனை தரிசிக்கும் போது அவனது சிந்தையும் அறிவும் எவ்வளவு தரிசாய்க் கிடக்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

இந்தப் புகைப்பழக்கத்திலிருந்துதான் மதுபாவனையும் துளிர்விட ஆரம்பிக்கிறது.
சிகரட் நெருப்பினை விழுங்கும் இவர்கள் சில சமயங்களில் அதன் மீது மதுவெனும் எண்ணெயினையும் ஊற்றி விடுகிறார்கள்.

மானுடத்தின் மரியாதையினையும் மகிமையினையும் இந்தப் புகை மறைத்துவிடுகின்றது.

எனவே புகைப்பழக்கத்தைக் கைக்கொண்ட யாவரும் விளைவுகள் பற்றித் தாமாகச் சிந்திக்க வேண்டும்.

நான் ஏன் சிகரட் புகைக்க வேண்டும்?
இதனால் எனக்கு என்ன லாபமிருக்கிறது?
இதனைக் கைவிடுவதனால் எனக்கு என்ன தீமையிருக்கிறது?
நான் ஏன் மரியாதையிழந்த மானுடனாய் வாழவேண்டும்?

இந்த வினாக்களை ஒருவன் தன் ஆழ்மனத்திலிருந்து எழுப்பு - விப்பானேயானால் -
அவன் சிகரட்டை மறந்து விடுவான்!
சடுதி மரணத்தைத் துறந்துவிடுவான்!!
நல்ல மானுடனாய் மீண்டும் மண்ணில் பிறந்துவிடுவான்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்பு தாண்டும் நரம்பில்லாத் துண்டம்

இந்த உலகம் உன்னதமிழந்து உருண்டு கொண்டிருக்க முதற் காரணம் நாவுதான்.

ஆறறிவை அர்த்தமிழக்கச் செய்யும் உடலுறுப்பும் நாவுதான்.

வீடு தொடங்கி நாடு முழுவதும் ஆங்காங்கே அரங்கேறிக் கொண்டிருக்கும் அத்தனை பிரச்சினைகளுக்குமான மொத்தக் காரணங்களையும் நாவுதான் உற்பத்தி செய்கின்றது.

அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போன்று
அகத்தின் அசிங்கம் மானிடனின் நாவினால் தெரிகிறது;
நா உமிழும் வார்த்தைகளில் அது புரிகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்ற வாக்கு மனிதனின் பிறரை நோக்கிய ஒவ்வொரு அதட்டலிலும் அர்த்தப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

தீயைக் கக்கும் துப்பாக்கியை விடவும் தீய வார்த்தைகளைத் துப்பும் நா எவ்வளவோ பயங்கரமானது.

இந்த உலகிலே, அரிவாள் ஏந்துதல்களும் துப்பாக்கி தூக்குதல்களும் நாவினால்த்தான் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

வாயிலிருந்து வரும் வார்த்தைகள் இங்கே நிறையப் பேரின் வாழ்க்கைப்பயிருக்குத் தீ மூட்டிக்கொண்டிருக்கின்றன.

ஏராளமான விவாகரத்து நோட்டீஸ்கள் நாவின் விபரீதங்களில் இருந்துதான் உருவெடுக்கின்றன.

நாவொன்றே ஒருவனின் பிறப்பின் தன்மையைக் காட்டிவிடப் போதுமானது. இதன் நிரூபனமாகவே,

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"

என்ற வாக்குக் கூட வள்ளுவரின் வாய்ச் சொல்லாய் வலம் வந்திருக்கின்றது.
முளைக்கும் விதையானது நிலத்தின் தன்மையினைக் காட்டுவதனைப் போல ஒருவனுடைய வாய்ச்சொல் அவனது குடிப்பிறப்பைக் காட்டும் என வள்ளுவர், நா பற்றி சத்திய வாக்குப் பொழிந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன், தன் உள்ளத்தில் கொண்டுள்ள அன்பு, கருணை, பாசம் அத்தனைக்கும் பிறரிடத்தில் நாவினால் உருவங்கொடுக்க வேண்டுமென்றுதான் இறைவன் எமக்கு மனிதன் எனும் உருவம் கொடுத்துள்ளான்.

நாமோ பொறாமை, பெருமை, கோபம் போன்றவைகளைத்தான் கொளுக்க வைத்துக்கொண்டிருக்கின்றோம்.

நாவினால் நிறையப் பேர் சாதித்திருக்கிறார்கள்.

நாவு நிறையப்பேரின் மனத்தினை சாகடித்துமிருக்கிறது.

நாம் நாவினால் சாதிக்க மட்டுமே பழகவேண்டும்.

"சொலல்வல்லனாய்" இருந்து செகத்தில் என்றும் வெல்பவனாய் வாழவேண்டுமேயன்றி "பயனில சொல்லி" யாவருக்கும் பாதகம் விளைவிக்கக் கூடாது.

நல்லதையே உள்ளத்திற்கு ஏற்றுமதி செய்து அதனையே நாவினால் இறக்குமதி செய்ய யாவரும் பழகிக்கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகைப் பூக்கள்

புன்னகை!

ஆறறிவாளனை அர்த்தப்படுத்தும் ஆரம்ப அத்தியாயம்.

மனசின் வெளிச்சத்தை மற்றோர்க்குணர்த்தும் உருவமற்ற கருவி.

மானுடம் மணம் பரப்ப மனிதனின் முகம் உதிர்க்கும் பூக்கள்.

புன்னகைக்கு வடிவமிருந்திருந்தால் சமாதானத்தின் சின்னம் இதுவாகத்தான் இருந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமரத்தின் வேர் கல்மலையைப் பிளக்குமே அது போலத்தான் புன்னகையும்; கல் மனத்தையும் கரைத்துவிடும்!

முகத்தின் அழகை முழுதாய்க்காட்ட புன்னகை ஒன்றால் மட்டுந்தான் முடியும்.

தோலின் நிறமொன்றால் மட்டும் அழகை அளந்துவிட முடியாது. மாறாகப் புன்னகைப் பூக்களே மானுடனின் அழகின் எடையை அதிகரிக்கவல்லன.

சிரிக்கும் மனிதனுக்குத்தான் சிநேகிதங்கள் அதிகம்.

சிரிக்கும் மனிதனை நோய் நொடிகள் நெருங்குவதில்லை.

எம்மவர்களில் நிறையப்பேரின் புன்னகை காகிதப் பூக்களை மாதிரி; அதிலிருந்து வாசனை வருவதில்லை!

பல்லைக் காட்டுதலெல்லாம் புன்னகை எனும் மகுடம் சூடிவிட முடியாது!

இங்குள்ளவர்கள் நிறையப்பேர் பல்லைக் காட்டுதலொன்றையே புன்னகையெனப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

மனிதன் இன்று சிரிக்கத் தெரியாதவனாய்க் கிடக்கின்றான்.

இந் நிலையினை, "சிரிக்கக் கற்றுக்கொடு மகனே!" எனும் மொழிபெயர்ப்புக் கவிதையொன்று அழகுறக் காட்டுகின்றது.

இக்கவிதை, மானுடத்தின் நிகழ்காலப்புன்னகை எவ்வாறானதென்று எடுத்தியம்புகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னொருகாலத்தில்
மகனே,
அவர்கள் இதயத்தோடு சிரிப்பார்கள்
கண்களால் சிரிப்பார்கள்
ஆனால், இப்போது
பற்களால் மட்டுமே சிரிக்கிறார்கள்.

அவர்களது பனிக்கட்டி மூடிய
சில்லிட்ட கண்கள்
என் நிழல்களுக்குப் பின்னாலும்
துழாவுகின்றன,
அவர்கள் தங்கள் இதயங்களோடு
கை குலுக்கிய காலங்கள்
இருக்கத்தான் செய்தன.

என் மகனே, குழந்தாய்
இப்போது அவர்களின் வலது கை
இதயமில்லாமல் குலுக்குகிறபோது
இடது கை
என் காலி சட்டைப்பைகளை
துழாவுகின்றன.

'உங்கள் வீடாக நினைத்துக் கொள்ளுங்கள்'
'மீண்டும் வருக'
என்று சொல்கிறார்கள்.
ஆனால்,
நான் மீண்டும் வந்து
தன் வீடாக நினைக்கிறபோது
ஒருமுறை, இருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது முறை இருக்கப்போவதில்லை
ஏனெனில்,
கதவுகள் எனக்காக மூடிக்கொள்கின்றன.
நான் பலவற்றைக் கற்றுக் கொண்டேன்,
மகனே, நான் பலமுகங்களை
அணியக் கற்றுக் கொண்டேன்.

அடிக்கடி மாற்றும் உடைகளைப்போல -
வீட்டு முகம், அலுவலக முகம்,
நடுத்தெரு முகம், விருந்து முகம்
மது அருந்தும் முகம் என்று -
படங்களில் நிலையாக இருக்கும்
சிரிப்புக்களைப் போல,
உறுதி அளிக்கும் சிரிப்புக்கள்.

என்னை நம்பு மகனே,
நான்
உன்னைப்போல இருந்தபோது
எப்படி இருந்தேனோ
அப்படியே இருக்க விரும்புகிறேன்.

இந்த ஊமைச் செய்திகள் அனைத்தையும்
மறக்க விரும்புகிறேன்.

சிரிப்பது எப்படி என்று
மீண்டும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்.
ஏனெனில்,
நான் கண்ணாடியில் சிரிக்கிறபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பற்கள்
பாம்பின் நச்சுப்பற்கள் போல்
தெரிகின்றன.

மகனே, குழந்தாய்!
எப்படி சிரிப்பது என்று
எனக்குக் காட்டு

ஒரு காலத்தில்
நான் உன்னைப்போல் இருந்தபோது
எப்படிச் சிரித்தேன் என்று
எனக்குக் காட்டு, மகனே!"

புன்னகை வெறுமனே வாயசைப்பினாலேயோ "பற்பசை விளம்பரங்களினாலேயோ" தோன்றிவிடுவதன்று.

புன்னகையின் வேர் உள்ளத்திலிருக்க வேண்டும்.

இங்குள்ளவர்களும் நிறையத் தடவைகள் உள்ளத்தின் சம்மதத்துடன் புன்னகைக்கிறார்கள்தான்;

எப்போது தெரியுமா?

பிறரின் துன்பத்தின் போது!

துன்பத்தில் சிரிக்கும் மனவலிமை வேண்டுமென நிறையப்பேர் சொல்லியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள்.

அதனைத் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறது நமது மனித இனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குத் துன்பம் நேரும் போதும் மனந்தளராது சிரிக்கும் மனப் பக்குவம் தோன்ற வேண்டும் எனும் கருத்தினை, பிறர் துன்பத்தில் சிரிக்க வேண்டுமென்று தவறாகப் புரிந்து கொண்டதினாலேயோ என்னவோ நிறையப் பேர் மாற்றானின் துயரத்தில் வாய்விட்டுச் சிரிக்கும் பழக்கத்தினைத் தன்னில் வழக்கமாக்கியிருக்கிறார்கள்.

ஒருத்தனின் வளர்ச்சியில், சந்தோசத்தில் ஆத்திரங்கொள்ளும் மனித மனங்கள், அவனது வீழ்ச்சியிலும் கவலையிலும் வாய்விட்டு, உள்ளந் தொட்டுச் சிரிக்கப்பழகியிருக்கின்றன.

இன்னும் சிலர் இருக்கிறார்கள்;
இவர்கள் எதற்குமே சிரிப்பதே கிடையாது!

பிரயாணத்தில் சிலர்;
மௌனமாக வந்து பக்கத்திலமர்வார்கள். "கம்"மென்றிருந்து விட்டு அப்படியே எழுந்து சென்றுவிடுவார்கள்.

சிரிப்பின் ரேகையினை அவர்களில் காணமுடிவதில்லை.

கொஞ்சம் பேசிப்பார்ப்போம் எனப் பேச்சித் தொட்டால்,

"ஆம், இல்லை!" என்பவற்றைத் தவிர வேறெந்த வார்த்தையினையும் அவர்கள் வெளியிடுவதில்லை!

இவர்களாவது பரவாயில்லை. இன்னும் சிலர் இருக்கிறார்கள், "ஆம், இல்லை" என்ற வார்த்தைகளைக் கூட தலையினால் காண்பித்து விட்டு அவர்கள் பாட்டுக்கு ஏதோ வாசித்துக் கொண்டிருப்பார்கள்.

இத்தகையோரின் பக்கத்திலிருப்பதற்கே பிறருக்குப் பயம் தோன்றி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னினத்தைக் கண்டு தாமே அதிகபட்சமாய்ப் பயந்து கொள்ளும் இனம் உலகிலே மனித இனமாகத்தான் இருக்க முடியும்.

ஏனையோருடன் மனம் விட்டுப் பேசுவதற்கே மனதில்லாத மனிதர்களால் எவ்வாறு புன்னகையினால் மணம் பரப்ப முடியும்...?

சில மனிதர்களைப் பார்த்தாலே அவர்களுடன் அவசியம் சிநேகிதம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தோன்றும்.

இன்னும் சிலரைப் பார்த்தால் காரணமின்றியே கோபம் கோபமாய் வரும்.
இவ்விரு வகையினரும் நம்முடன் நேரடியாகச் சம்பந்தப் படாதவர்களாக இருந்தாலும் அப்படியே.

முதலாமவர் பற்றி எம்மையறியாமலேயே எமதுள்ளம் ஒரு நற் சான்றிதழைத் தயார்படுத்தி விடுகின்றது.

அதே சமயம் இரண்டாமவர் பற்றி யாரும் பேசினால் போதும், அவரைப்பற்றித் தவறாகப் பேசத் துவங்கி விடுவோம்.

இவற்றுக்கெல்லாம் காரணம் -
முதலாமவர் புன்னகையின் சொந்தக்காரர்.
இரண்டாமவர் புன்னகையைத தனக்குப் பகையாக்கிக் கொண்டவர்.

புன்னகையைப் பகையாக்கிக் கொண்டவர் தானேதும் செய்யாமலேயே தனக்குப் பகைவர்களை உருவாக்கி விடுகிறார்.

நான் வெளியூரிலிருக்கும் எனது நண்பரொருவரிடம் சென்றிருந்த சமயம் இறுதிச் சடங்கு நிகழ்வொன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிகழ்வுக்கு அவ்வூரே திரண்டு வந்திருந்தது.

"யார் இவர், மக்களுக்கு நிறையச் சேவை செய்த மனிதராயிருப்பார் போலிருக்கிறதே..."

என எனது நண்பனிடம் வினவினேன்.

"அவர் செய்த சேவையெல்லாம் யாவருடனும் புன்னகை ததும்பப் பேசுவதொன்றுதான். இது வரைக்கும் அவர் எவருடைய மனமும் புண்படும்படியாகப் பேசியதாகவோ எவருடனும் முரண்பட்டதாகவோ எனக்குத் தெரியாது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் யாவரையும் சிரித்த முகத்துடனேயே எதிர்கொள்வார். இவரது இந்தப் பண்பினால் ஆங்காங்கே நடக்கும் சிறு சிறு ஊர்ப்பிரச்சினைகளைக் கூட மிக இலகுவாகத் தீர்த்து வைத்திருக்கிறார்"

என எனது நண்பன் எனக்கு விளக்கம் தந்தார்.

"புன்னகையினால் இவ்வளவு சாதிக்க முடியுமா? " என்றவாறு எனதுள்ளம், அங்கு கூட்டங்கூட்டமாய் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்து வியந்து நின்றது.

> "பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம்; அது இன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்"

என்ற வள்ளுவ வாக்கினை வாய் முணுமுணுக்கத் துவங்கியது.

❧ ❧ ❧



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை உயர்த்திக்காட்டு!

எம்மவர் நிறையப் பேரில் வழமையானதொரு ஆதங்கமிருக்கிறது.

அது அந்தஸ்த்து சம்பந்தமான ஆதங்கம்.

பிரதானமாக இரு விடயங்களில் இவ்வாதங்கம் வெளிப்பட்டு நிற்கிறது.

ஒன்று காதலில்;
இன்னொன்று நட்பில்!

இது விடயத்தில் அனேகரின் உள்ளத்தின் அழுகை இப்படியாக ஒலிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்போதெல்லாம் பிள்ளங்க நம்மொல மாதிரி ஆக்களக் காதலிக்க மாட்டாங்க. அவங்களுக்குத் தேவை - பணம், படிப்பு...

அதையும் தாண்டிப் பிள்ளங்க காதலித்தாலும் வீட்டாரின் சம்மதத்திற்கான தகுதிகாண் பரீட்சையில் தேறுவதற்குப் பணம் இன்றியமையாததொன்றாகிவிடுகின்றது..."

என்றொரு வாலிபக் கூட்டம் கவலையினை உள்ளத்திலும் முகத்திலும் பூசிக் கொள்கிறது.

"அவன் எம்மோடெல்லாம் பழக மாட்டான். பணக்காரன்தானே... பணக்காரர்களோடுதான் பழகுவான். பள்ளியில் ஒன்றாகப் படித்தோம் என்பதற்காகக் கூட நம்மொல மாதிரி ஆக்களோட சிரிக்கக்கூட மாட்டான்..."

என்று நட்புக் கொள்ளத் தகுதியில்லாமல் ஏங்கிக் கிடக்கிறது இன்னொரு கூட்டம்.

இது விடயத்தில் யாவரும் ஒன்றைச் சிந்திக்க வேண்டும்.

இப்போது காலம் மாறிப் போய்விட்டது.

மனசு பற்றிப்பேசி எவரின் மீதும் இலகுவில் புரிந்துணர்வினைத் தூவிவிட முடியாது.

பிறரின் மனத்தினைப் புரிந்தொழுகுவதற்கோ பிறரின் சந்தோசிப்பிற் -காய்க் கைகொடுப்பதற்கோ இன்று மனித மனங்கள் தயாரிழந்து கிடக்கின்ற நிலையில் அது பற்றிப் பேசுவதோ வருந்துவதோ பிரயோஜனமில்லாததொன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறான விடயங்களில் வருந்துபவர்கள் யாவரும் தம் நிலையினை மாற்றி அதற்கான மாற்று வழிகளை இனங்கண்டு கொள்வதே சிறந்தது.

"ஊரைத் திருத்த எண்ணுவதை விடவும்
உன்னை உயர்த்த எண்ணுவதே சாலப்பொருத்தம்!" எனும் கோசமே நவீனத்திற்குப் பொருந்தும்.

ஒரு பெண் பிள்ளையைக் காதலிக்கிறான் ஒருத்தன். அப்பிள்ளையும் இவனை மனதார விரும்புகிறது என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால் இவனிடம், அவனது எதிர்கால நல்வாழ்வு சம்பந்தமான எந்தவொரு அறிகுறியும் வெளிப்பட்டுத் தோன்றவோ அதற்கான எவ்வித முயற்சியுமோ இல்லையென்றால் எந்தப் பெற்றோரும் இக்காதலுக்கு சம்மதம் வழங்கத் தயங்குவார்களேயன்றி மாறாக "மனசு ரெண்டும் இணைஞ்சிடிச்சு... இனி என்ன செய்வது..." என்று காதல் மகிமை பேசியெல்லாம் எவரும் சேர்த்து வைக்க முன் வரமாட்டார்கள்.

அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் எதிர்காலத்தில் தமது பிள்ளை கஷ்டப்படாமல் இருக்க வேண்டுமென்பதே!

அதிலும் இன்று மானுடனின் சந்தோசத்தைத் தீர்மானிப்பதில் பணம் பாரியதொரு செல்வாக்குச் செலுத்துகின்றமையினால் அவர்கள் அதனை எதிர்பார்ப்பதைத் தவறு எனக் கருதிவிட முடியாது.

ஒவ்வொருவரும் பெற்றோர் என்ற ஸ்த்தானத்தில் அமர்ந்து பார்த்தால் இது நன்றாகப் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன், காதலித்துப் பிரச்சினைகளின் நடுவே திருமணம் செய்து கொண்டவர்கள் கூட இது விடயத்தில் தமது பிள்ளைகளுடன் கடுமையாகவே நடந்து கொள்வதனைக் காணமுடிகிறது.

ஏனெனில் அவர்கள் பட்டுத் தெளிந்தவர்கள்!

ஆகவே பணத்தினாலும் படிப்பினாலும் மட்டுமே ஒருவரின் அந்தஸ்த்து வரையறை செய்யப்படுகிறதென்றால், அவைகளிருந்தால் மட்டுமே ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென்றிருந்தால் முதலில் அவற்றினை வாகை சூடுவதில் முழுமுயற்சி செய்ய வேண்டுமேயன்றி அவற்றினை எதிர்பார்க்கும் மனித மனங்களைப் பற்றி நொந்துகொள்வதில் நன்மையெதுவும் நிகழ்ந்து விடப்போவதில்லை.

மாறாக நாமே விரக்தியின் விளிம்பில் நம்மை இருத்திக் கொள்ள வேண்டிய நிலையே ஏற்பட்டுவிடும்.

ஏன் யாவரும் பணம், படிப்பு என்று அலைகிறார்கள் என கவலையினால் வினாத்தொடுத்தலானது ஒரு போதும் எமக்கு நல்ல தீர்வினைப் பெற்றுத்தரமாட்டாது.

ஆக, மனித மனங்களின் நிகழ்காலத் தேவை, எதிர்பார்ப்பு எதுவென உணர்ந்து அவற்றினை நம்மில் ஏற்படுத்திக் கொள்ளலொன்றே இதற்கான நல்ல தீர்வாக இருக்க முடியும்.

முயற்சியின்றித் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளும் மானுடனை பிறர் ஒதுக்கி ஓரங்கட்டுவதில் தவறிருக்க முடியாது.

இவ்விடயத்தில் ஊரார் மீது பலிசுமத்தல் தெளிந்த அறிவிற்கு அழகாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக, சோம்பேறிகள் என நம்மை நாமே இனங்காட்டவே இது வழி வகுக்கும்.

எனவே முயற்சி செய்து யாவும் பெற்றால் எண்ணுவது நிகழும்; பாரே நம்மைப் புகழும்!

காதலதுவும் கை கூடும்!
நண்பர் கூட்டமும் எமை நாடும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூட்டமாய்க் கூத்தடித்தல்!"

"நகுதல் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு"

என்றொரு குறளிருக்கிறது.

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டன்று. மாறாக நண்பர் நெறிகடந்து செல்லும் போது முற்பட்டுச் சென்று இடித்துரைக்கும் பொருட்டேயாகுமென்கிறது அக்குறள்.

இக்குறளைப் பார்க்கும் போது வள்ளுவன் எத்துணை பெரிய தீர்க்க தரிசியாக இருக்க வேண்டுமென எண்ணி உள்ளம் வியந்து போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நிலைக்கான அறிவுரையினை அப்போதே கூறிச் சென்றிருக்கும் இந்த மகான் மீதொரு மரியாதை பிறக்கிறது.

நிகழ்காலம் அணிந்திருக்கும் நண்பர் கூட்டத்தின் நிலையினை எண்ணும் போது இப்பொய்யா மொழியினால் யாவரையும் ஓங்கி அறைய வேண்டும் போலிருக்கிறது.

இன்று பள்ளி மாணவர்கள் தொடங்கி பக்குவப்பட்ட இளைஞர்கள் வரை நட்பு என்று சொல்லிக்கொண்டு கூட்டமாய்க் கூடி என்ன அரங்கேற்றித் திரிகிறார்கள் என்பதனை நோக்கும் போது நிகழ்காலம் நொந்து போகிறது.

எவற்றினைச் செய்யக் கூடாது எனத் திருவள்ளுவர் வலியுறுத்தியிருக்கிறாரோ அவற்றினையும் அவற்றினைத் தாண்டியும் இங்கு செய்துகொண்டிருக்கிறார்கள்.

நட்பினால் எவற்றினைச் செய்ய வேண்டுமென வேண்டியிருக்கிறாரோ அவற்றினை இங்குள்ளவர்கள் எவரும் செய்வதாய்த் தெரியவில்லை.

நட்பு என்றாலே "கூட்டமாய்ச் சேர்ந்து கூத்தடித்தல்" எனும் மகுட வாசகத்தின் கீழ்த்தான் ஆரம்பமாகின்றது.

இன்று நண்பர்கள் எங்காவது கூட்டமாகச் சேர்ந்தாலே ஏதாவது தவறு நிகழப்போகின்றதென்றுதான் அர்த்தங் கொள்ளக் கிடக்கிறது.

தாமாகத் தனியே தவறு செய்யப்பயப்படும் மனித மனம் கூட்டமாய்ச் சேரும் போது தவறு செய்வதற்கான தைரியம் பெற்று விடுகின்றது.

இதன் வெளிப்பாடு யாதெனில், இன்று ஒருத்தனுக்கு நண்பன் தேவைப்படுவதே தவறு செய்வதற்குத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் செய்தறியா பள்ளி மாணவன் தன் நண்பனின் வீட்டில்தான் நீலப்படம் பார்க்கிறான்.

சிகரட் புகைத்துப்பழக்கமில்லாத பள்ளிச்சிறுவன் தனது நண்பனின் குறைச்சிகரட்டைத்தான் முதன் முதலில் கையிலேந்துகிறான்.

காதல் எனும் பெயரில் உருவாகும் முக்கால்வாசிப் பிரச்சினைகளுக்கு முழுக்காரணமும் நண்பர்களாகவே இருக்கிறார்கள்.

ஒருத்தனின் சிந்தையைக் குழப்பி அவன் தன் காதலியை அழைத்துக்கொண்டு வேலிதாண்ட வைப்பவர்கள் நண்பர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால் அதன்பின் வரும் விபரீத வில்லங்கங்கள் பற்றி அவர்கள் சிந்திப்பதுமில்லை. அதனால் எதிர்காலத்தில் நண்பன் எதிர்கொள்ளும் துன்பத்தில் பங்கெடுப்பதுமில்லை.

இன்று இளைஞர்கள் காதல் என்ற பேரில் வரம்பு தாண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எம்மவர்களின் இன்றைய லேட்டஸ்ட்டான காதலில், காதலனும் காதலியும் ''இரா நேரத்தில் சந்தித்தல்'' எனும் விடயம் பிரபல்யமடைந்து வருகின்றது.

இதனால் காதலர்கள் திருமணத்திற்கு முன்னமே உறவு கொள்ளும் வழக்கம் சூடு பிடித்துள்ளது.

மேற்கத்தேயக் காதலில் ஆரம்பந்தொட்டே இருந்து வருகின்ற இந்நிகழ்வானது எம்மவர்களையும் தற்போது பீடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பண்பாடு, கலாசாரம் என்பவற்றை காற்றிலே பறக்கவிடும் இந்த "இரா நேரச் சந்திப்பிற்கு" முழுமையாக ஏற்பாடு செய்வதும் காதலியின் வீடு வரைக்கும் ஏற்றிக் கொண்டுபோய் விடுவதும் நண்பர்களே என்றால் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

சிகரட் ஒன்றிற்காகவே நண்பர்கள் இவ்விடயத்தில் உயிர் கொடுத்துதவத் தயாராயிருக்கிறார்கள்.

திருமண வீடுகளிலும் மரண வீடுகளிலும் நண்பர்கள் முந்தியடித்துக் கொண்டு உதவச் சென்றுவிடுகிறார்கள்.

அங்கு வருகின்ற பெண்பிள்ளைகளிடம் அவர்கள் புரியும் சேஷ்டைகளைப் பார்க்கும் போதுதான் அவர்களின் உள்நோக்கம் புரிகின்றது.

ஆங்காங்கே அரங்கேறும் சின்னச் சின்னத் திருட்டுக்களுக்குத் தலைமை வகிப்பவர்கள் ரூம் எடுத்துறங்கும் நண்பர் கூட்டங்களே!

இது மாத்திரமா?

நட்பு என்ற போர்வையில் பல இடங்களில் வன்முறைகள் வெடித்து விடுகின்றன.

ஒருத்தன் இன்னொருத்தனுடன் முரண்பட்டுவிட்டுத் தன் நண்பர்களிடம் வருகிறான்.

இவர்கள், என்ன? என வினவ, அவன் தன் பிரச்சினையைத் தனக்கு சாதகமாகக் கூறிவிடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே நண்பர்களனைவரும் ஹீரோக்களாகி விடுகிறார்கள்.

தீர விசாரிப்பதுமில்லை. நீதி எதுவெனச் சிந்திப்பதுமில்லை. கூட்டமாகச் சென்று ஒருத்தனைத் தாக்கிவிடுகிறார்கள்.

இப்படியாக நட்பு என்றாலே தகராறு என்பதாகவே மாறிக்கிடக்கிறது.

எனவே வள்ளுவனின் வாக்கு இங்கே தூக்கிலிடப்பட்டு விடுகின்றது.

"அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு"

என்கிறது இன்னொரு குறள்.

அதாவது, அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நண்பர்களை நீக்கி நல்ல வழியில் நடக்கச்செய்து அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே உண்மை நட்பென வள்ளுவர் பொன்வாக்குப் பொழிந்திருக்கிறார்.

ஆனால் நட்பு இங்கே மண்ணாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அழிவைத் தரும் விடயங்களிலிருந்து நீக்குதல் என்பதானது தற்போது தலைகீழாக மாறி அழிவைத் தரும் தீமைகளுக்கு இட்டுச் செல்வதே இன்றைய நட்பின் தலையாய கடமையாக மாறி விட்டதனைக் காணமுடிகிறது.

இவ்வாறான நட்பின் தொடர்தல்கள் எதிர்காலத்தில் தாங்க வொண்ணாத் துயரத்திற்கு வழிகோலி விடுவதுடன் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட வாழ்விலும் அது மாற்ற முடியா தீய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இளைஞர்கள் தங்களது நண்பர்கள் தெரிவை மிகவும் புத்தி சாதுரியத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

இக்கட்டுரையில் நான் குறிப்பிட்டுள்ள குறள்களிரண்டும் அத்தெரிவில் அவசியம் பிரதிபலிக்க வேண்டியது காலத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.


அவ்வாறு செய்யும் போதுதான் நட்பு ஒளி வீசும்!
வருங்காலமும் அதை மெச்சுப் பேசும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரா.ப.அரூஸ் தனது 21வது வயதில் ஏழே மாதங்களில் எழுதி முடித்துள்ள 21 நூல்கள்

01. தீப்பிடித்த பூக்கள் (கட்டுரைகள்)
02. வழிப்பாடு மீதான வேதனையின் வெளிப்பாடு (கவிதைத் தொகுப்பு)
03. கடலோடு கரைந்த காதல் (நாவல்)
04. "பல்கொலைக் கழகம்" (சிறுகதைத் தொகுப்பு)
05. உன்னைக் கொண்டே உனக்கொரு தாஜ்மஹால் (கவிதைத் தொகுப்பு)
06. மாணவர் மனத்திற்கு... (கட்டுரைகள்)
07. மரகதம் சிவந்ததேனோ... (கவிதைத் தொகுப்பு)
08. எனது சாம்ராஜ்யம் (நாவல்)
09. முற்றுவைத்தும் மூடப்படாத பேனா (கவிதைத் தொகுப்பு)
10. விஷமான போதும் வசமாக்கிக்கொண்டவன் (புதுக்கவிதைக் காவியம்)
11. எச்சில் தட்டு (கவிதைத் தொகுப்பு)
12. உயிருடனான உரையாடல் (கடிதத் தொகுப்பு)
13. ஏனெனில் நான் மனிதன் (கவிதைத் தொகுப்பு)
14. மணக்கும் மானிடம் (கவிதைத் தொகுப்பு)
15. மாண்பிழக்கும் மானுடம் I - இல்லறவியல் (சம்பவத்தொகுப்பு)
16. மாண்பிழக்கும் மானுடம் II - பாடசாலையியல் (சம்பவத்தொகுப்பு)
17. க.பொ.த (சா/த)ரத்திற்கான தமிழ் இலக்கணம் (பாடநூல்)
18. தமிழ் இலக்கியத் தொகுப்பு - வினாவிடை (பாடநூல்)
19. தமிழ் இலக்கிய நயம் - சந்தர்ப்பங் கூறல் (பாடநூல்)
20. தமிழ் இலக்கிய நயம் - கவிதைகள் (பாடநூல்)
21. தமிழ் இலக்கிய நயம் - உரைநடை (பாடநூல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பின்னிணைப்பு*

# "21 in 21" பற்றிய கதை

இது ஏழே மாதங்களில் கட்டிமுடிக்கப்பட்ட சாதனை வீடு!
நித்திரையின்றி நான் செய்த தவத்தின் வெளிப்பாடு!
நல்ல மானுடம் பயணிப்பதற்கான வழிப்பாடு!!

உண்மையிலேயே, நானும் ஒரு சாதனையாளனாக வேண்டும்
என்கின்ற உத்வேகத்தினால் இவை எழுதப்பட்டவைகளல்ல;

மானுடம் மரியாதையிழந்து வரும் நிலை கண்டு
எனது பிஞ்சி நெஞ்சு பரிதவித்தது.
மனிதம் சிறுகச் சிறுகச் சாகடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்
கோரக் காட்சிகளைக் கண்டு
எனது ரத்தம் கொதித்தது.
ஒழுக்கம், பண்பாடு என்பன எம்மவர்களால்
ஓரங்கட்டப்படுவதனைப் பார்த்து
என் கை கால்கள் துடித்தன.

என்னால் என்ன செய்ய முடியும்...
எனக் கண்ணீருடன் சிந்தித்துக்கொண்டிருந்த சமயம்
தமிழ்த்தாய் என் தலை தடாவிச் சொன்னாள்,

"இதோ இருக்கிறது பேனா ஆயுதம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV

என்னைப் பொறுத்த மட்டில்-
எவராலும் செய்ய முடியாதவற்றை
ஒருத்தன் செய்து காண்பிப்பது மட்டும்
உண்மையான சாதனையாகிவிடமாட்டாது.

அவன் செய்யும் விடயம் பிறருக்கும் நன்மையளிக்க வேண்டும்.
குறிப்பாக மானுடம் செழிக்க வழி வகுக்க வேண்டும்.

எவராலும் தூக்க முடியாத எடை ஒன்றினை
ஒருத்தன் தூக்கி கின்னஸில் இடம் பிடிக்கிறான்;
அவன் எடை தூக்குவதால் எவருக்கென்ன லாபம்?

எனவேதான் என் சாதனையை
எழுத்தில் நிலைநாட்ட எண்ணினேன்!

"ஏழே மாதங்களில் இருபத்தியொரு புத்தகங்களா?
அதுவும் இருபத்தியொரு வயதிலா...?
என்னால நம்ப முடியாது. சாத்தியமேயில்லை..."

"சாத்தியப்படாததொன்றைச்
சாத்தியமாக்கிக் காட்டும் போதுதான்
அது சாதனையாகிறது!"

அத்தனை நூல்களும் ஒவ்வொன்றாய் என்னிலிருந்து
பிரசவமானபோதும்
அவற்றினை நான் கணணி மயப்படுத்திய போதும்
என்னினிய சிநேகிதன் "டொனி" என் பக்கத்திலிருந்தார்.

இதன் போதான வலி, வேதனை அத்தனையிலும்
அருகிலிருந்து பங்கெடுத்துக்கொண்டவர் அவர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V

இன்னமும் ஆழமாகச் சொல்வதானால்,
எனது நூற்குழந்தைகளை
எனக்கடுத்ததாக முத்தமிட்டவர் அந்த "ஏங்கல்ஸ்"தான்!

"21 நூல்களையும் வெளியிடுவதுன்னா சும்மாவா...
இவரால இது இயலுமா...?
நானும் பார்க்கத்தான் போறன்,
இவர் சாதனை படைக்கிறத்த..."
என்று சிலரின் எக்களிப்புக்கள்.

இருபத்தியொரு நூல்களை
ஒன்றாக வெளியிடுதல் என்பது சாதனையல்ல.
அப்படியானால் அச்சகங்களுக்குச் சொந்தக்காரர்கள்
அனைவரும் வரிசையாய்ச் சாதனை படைக்கலாம்.

ஏழே மாதங்களில் இருபத்தியொரு நூல்களையும்
எழுதியும் தொகுத்தும் முடித்துவிட்டேனே!
என்பதை எண்ணும்போதெல்லாம்
என் நாவு "அல்ஹம்துலில்லாஹ்"வை
உற்பத்திசெய்துகொண்டேயிருக்கின்றது.

"21 நூல்களையும் ஒரே மேடையில் வெளியிட்டால்
நல்லாயிருக்குமே..."

தங்கி வாழும் வயதுடைய என்னால்
அத்தனைக்குமான அச்சுச் செலவினை ஒரே தடவையில்
ஈடுசெய்வதிலுள்ள சிரமங்கள் ஒரு புறமிருக்க,
அனைத்தையும் ஒன்றாக வாங்குவதிலும் படிப்பதிலும்
வாசகர்களும் நிறையவே அசௌகரியங்களை
எதிர்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலினால்,
யாவற்றையும் ஒன்றாகத் திணிக்காமல்
மனித மனங்களில் ஒவ்வொன்றாய் விதைக்க விரும்புகிறேன்;

அதிலிருந்து நல்ல மானுடம் முளைக்கட்டும்!
புதுச் சமுதாயம் தளைக்கட்டும்!!

*நல்ல மானுடத்தில் நாட்டங்கொண்டு...*
**ரா.ப.அரூஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...இருபத்தொரு வயது இளைஞர் அரூஸ் தனது இருபத்தொராவது வயதில் எழுதிய இருபத்தொரு நூல்களையும் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

உலக சாதனை இது!
ஒப்பற்ற இவரின் ஆர்வத்தையும் ஆற்றலையும் போற்றுவோம்! "

வாழ்த்துக்களுடன்,
மு. மேத்தா



ISBN 978-955-52299-0-6

LKR.250/-
2.2 USD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org